www.tamilarangam.net

ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது.

# தர்க்கீதம் 16/17

மாசி-பங்குனி 1982 ★ மலர் 2 ★ இதழ் 4 ★ மாத இதழ் ★ வெளிநாட்டுப் பதிப்பு U. K 1£ / U. S $ 2

# 'தமிழீழ'க் கோரிக்கையில் 'தனிமாவட்ட' கோரிக்கை

**தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனைகள் தீர 'தமிழீழ'மே ஒரே வழி என சூளுரைத்து மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் மத்தியில் 'தனிமாவட்ட' கோஷம் எழுவது 'தமிழீழ'க் கோரிக்கையின் உள்முரண்பாடுகளையே வெளிப் படுத்துகின்றன.**

''தனிமாவட்ட'' கோஷம் பலரிடையே பலவிதமான கேள்விகளை எழுப்பி நியாயம் காண முற்பட்டாலும். தமிழ்ப் பேசும் மக்களை ஒட்டுமொத்தமாக எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள், பிரச்சனைகள் தீர இது வழி சமைக்குமா? என்பதை நோக்கவேண்டும். இதனாலேயே 'தமிழீழ'க் கோரிக்கை வெறும் ''காற்றடைத்த பை''யா என பலரிடையே ஐயம் எழுகின்றது. இதை ஆழ்ந்து பார்ப்பதன் மூலமே ஈழக் கோரிக்கையின் அடிப்படை உண்மையை புரிந்து கொள்ள முடியும்.

''தமிழீழ''க் கோரிக்கை, தமிழ்ப் பேசும் மக்களின் சமூக அரசியற் பொருளாதார மாற்றத்திற்கு வழிவகுக்கக் கூடிய மக்கள் சக்தியை கொண்டுள்ளதா? அல்லது, தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை மறைத்து, வெறும் அன்றாடப் பிரச்சனைகளையும் அதுவும் தமிழ்ப் பேசும் மக்களிற் பெருந் தொகையினரான சாதாரண பாமர தொழிலாள வர்க்கத்தினரைத் தவிர்ந்த ஏனைய குறைந்த விகித மக்களினது அபிலாசைகளைக் கொண்டுள்ள வெறும் உணர்ச்சிப் பிரவாகமா? என பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், பண்ணாகத்தில் பிரகடனமாகிபின் பொதுத் தேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்று உலகிற்கு உணர்த்தப்பட்ட ''தமிழீழ'' கோரிக்கை இன்று ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் அதை அடைவதற்கான எவ்வித முன்னேற்றகரமான வளர்ச்சியுமின்றி அஸ்தமித்து போகும் சூழ்நிலையை எண்ணி 'இலட்சிய இதயங்கள்' வேதனைப்படும் நிலை எழுந்திருக்காது.

கல்வி வாய்ப்பின்மை, உத்தியோக வாய்ப்பின்மை, தனி சிங்கள மொழிப் பிரயோகம், அபிவிருத்தியில் பாகுபாடு, சிங்கள குடியேற்றம் போன்ற இன்னும் பல இடர்களை களைந் தெறியவே 25 வருடங்களுக்கு மேலாக நம் அரசியல் தலைவர்கள் சிங்கள அரசுகளுடன் பல வழிகளைக் கையாண்டார்கள். இந்த வழி முறைகள் பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையவில்லை. பதிலாக திட்டமிட்டு மேலும் மேலும் தமிழ்ப் பேசும் மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். இந்நிலை 70 களுக்குப் பின்னர் உத்வேகம் பெற்று பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வழிமுறைகளில் திருப்பம் பெற்றே ''தமிழீழம்'' என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனல் இக்கோரிக்கை முன் வைக்கப்படும் போது அதற்கான அடிப்படைக் காரணிகள் மேலே கூறப்பட்ட மேலெழுந்தவாரியான பிரச்சனைகளையே கொண்டிருந்தன. இனதலேயே இக் கோரிக்கை வெறும் உணர்ச்சி உந்துதலை அளித்ததே தவிர வலுவூட்டக் கூடிய சரியான வழிசமைக்கக் கூடிய வடிவம் பெறவில்லை. கல்வி கற்கக் கூடிய பொருளாதார வசதி படைத்தோர் வாய்ப்பைப் பெறமுடியாத பிரச்சனையும், வாய்ப்புப் பெற்றோர் உத்தியோகம் பெறமுடியாத பிரச்சனைகளையும், இவற்றிற்கு இடையூருக சிங்கள மொழித் தேர்ச்சி போன்றவையே இக் கோரிக்கைக்கு உத்வேகம் கொடுத்தது. ஆனல், கல்வி வாசனையே அற்று சிறு பராயத்திலேயே சீரழிகின்ற அல்லது, குறிப்பிட்ட எல்லை வரை படித்துவிட்டு இடையில் சறுக்கி விழுகின்ற நிலை ஆகியவற்ருல் பெருந்தொகையினர் பொருளாதார சமூக கெடுபிடிகளால் அல்லலுறும் போது இவர்களது பிரச்சனைகளை இக் கோரிக்கை தொடவில்லையே!

சாதி, சமய, பிரதேச ரீதியாக தமிழ்ப் பேசும் சமுதாயம் இன்று முரண்பட்டுக்கொண்டிருப்பதும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் சுரண்டலுக்குள்ளாகிய நிலையிலும் இவற்றையெல்லாம் ஏன் இந்த கோரிக்கை அடிப்படைக்காரணிகளாக முன் நிறுத்தி மக்களின் அடித்தளத்திலுள்ள விடுதலை உணர்வுகளை தட்டி எழுப்பவில்லை.

இதனாலேயே ''தமிழீழ''க் கோரிக்கை, உள்முரண்பாடுகள் கொண்ட வெறும் உணர்ச்சிக்கோரிக்கை என்கிறோம். இந்த வெறுமையினாலேயே தலைவர் அமிர் கூறுவதைப் போல், ''காலத்திற்கு சூழ்நிலைக்கு ஏற்ப எமது வழி முறைகளையும் மாற்றிக் கொள்ளவேண்டும்'' என்ற அடிப்படையில் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்த வழியில் ஒரு திருப்பமே மாவட்டசபை. அதன் அதிகாரங்களை கையில் எடுத்துக் கொண்டு தமிழ் பேசும் மக்க

தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# மலையக மக்களின் நெடும் பயணம் தஞ்சமடைந்த நாட்டிலும் வாழ்வு இல்லையா?

**தொழிலாளர் வாழ்வுக்கு பரிகாரம் இல்லையா? இப்படி ஏக்கப் பெருமூச்சுக்களுடன் தம்பயணத்தை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றார்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்.**

அரைவயிற்றுச் சோற்றுக் காசு அடிமைகளாய் குவிக்கப் பட்டு பல்லாண்டு காலமாக ''சுபீசமான வாழ்வு வரும்'' என்ற அங்கலாய்ப்பில் உழைத்த உழைப்புக்குத்தான் ஒரு நேர சோறு உண்ண வழியில்லாவிட்டாலும் உழைத்த களைப்பால் - உறங்குவதற்குத் தான் இடமுண்டா? நிம்மதியான தூக்கமுண்டா?

சுரண்டப்படுகின்றோம். இது இன்றைய சமூக அமைப்பின் பிரதானகேடு. இனரீதியான மிகவும் பயங்கரமான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகிறோம். இந்தப் பின்னணியில் இதற்கு மேலாக ''அகதிகள்'' என்ற பட்டம் பெற்று நாடு கடத்தப்படுகிறோம். இந்த நிலையை மக்கள் விரும்பினால் கூட அத்தகைய முடிவிற்கு தள்ளப்பட்டதன் காரணம் தான் என்ன? இலங்கை முதலாளித்துவ சிங்கள எதேச் சாதிகார அரசு வர்க்கரீதியாகவும், இனரீதியாகவும் திட்டமிட்டு நடாத்தும் கொடுங் கோன்மையே!

இத்தகைய இன்னல்களை இந்நாட்டில் அனுபவித்து வரும் நிலையில் அரசியல் சூழ்ச்சிகளினாலும், பொய்ப் பிரச் சாரங்களினாலும் இந்தியா சென்றுவிட்டால் ஏதோசுபீட்சம் கிடைத்துவிடும் என்ற அங்கலாய்ப்பு உந்துதலினல் கப்பலேறி நாடுகடக்கின்றனர். ஆனல் அங்கு சென்றதும் இங்கு அனுபவித்த இன்னல்களிலும் பார்க்க மிகவும் கொடுமையான வாழ்க்கை கஷ்டங்களை அங்கே அனுபவிக்கின்றனர். அன்றாடம்உழைத்து வாழ்வதற்குக்கூட வக்கில்லாமல் நாடோடிகள் போல் அலைந்து திரிய வேண்டிய நிலைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர். இப்படி அன்றாடவாழ்க்கைக் காக அலைந்து அவர்கள் அங்குள்ள சமூகக் கெடுபிடிகளின் தாக்கத்தினால் ''சிலோன் அகதிகள்'' என்ற பட்டமிடப் பட்டு குறைந்த சாதிக்காரராகக் கணிப்பிடப்படும் நிலையையும், இதனல் இன்னேரன்ன இம்சைகளுக்கு உள்ளாக்கப் படுவதையும் காணலாம் இப்படி இம்சைக்குள்ளாக்கப்படுவது பற்றி தமிழகப் பத்திரிகைகள் அண்மைக் . காலமாக செய்திகள் வெளியிட்டு வருகின்றன.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரம் என்பது ஒரு தந்திரம்

ஆங்கிலத் திகதி முறையின் அடிப்படையில் 1948-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 4-ம் திகதியானது இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுபட்டு 'சுதந்திரம்' பெற்ற தினமாக வர்ணணிக்கப்பட்டு வருகிறது. ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசியற் கட்சியும் இத்தினத்தை சுதந்திர தினமாக எண்ணி நினைவு கூர்ந்து, கொண்டாட்டங்களிலும் இறங்கி வந்திருக்கிறது. ஆனல் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவரிடம் ஆட்சிக் கைமாற்றம் பெற்ற தினமென்ற கருத்தே விதைக்கப்பட்டிருக்கிறது. அநேக அரசியல் ஆய்வாளர்கள் இந்நாளை உயரிய நிலைக்குரிய தொன்ருக எண்ணுவதில்லை. இவ்வாருக வேறுபட்ட கோணங்களூடாக பார்க்கப்படும். 1948ம் ஆண்டு சம்பவமானது, சுதந்திரம் என்பதன் பொருளையும், இன்றுவரை மக்கள் பெற்றதும் பெற்று வருவதுமான அனுபவங்களைத் திரட்டியும் பார்க்கப்படும் போதுதான் உண்மையான பார்வைக்கு இலக்காகும்.

## சுதந்திரம் என்ருல் என்ன?

ஒரு நாட்டினுள் மக்களின் உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத்தேவைகள் நிறைவு செய்யப்பட்ட நிலையில், பெரும்பாலான மக்களின் எண்ண அபிலாசைகளின் அடிப்படையில் எழுந்த இலட்சியங்களை அடைவதற்கு ஒவ்வொருவரும் தத்தமது திறமைக்குட்பட்ட பங்களிப்புகளைச் செய்ய சகல வசதிகளும் அமையப் பெற்ற நிலையே விடுதலை பெற்ற நிலையாகும். இத்தகைய உயரிய நிலையை அடைவதற்கு தீட்டப்படும் திட்டங்களை சுதந்திரமாக செய்யப்படவைக்க அத்திவாரமிடப்பட்ட தினத்தையே சுதந்திர தினம் எனலாம். இங்கு வரையறுப்பை பின்னணியாகக் கொண்டே இலங்கை ஒரு சுதந்திரம் பெற்ற நாடாஎன்ற கேள்வியை எழுப்ப வேண்டும்.

இலங்கையில் கோடி மக்களில் சுமார் 80% தினர் ஒருநேர சத்தற்ற உணவுக்குக் கூட வசதியற்று வாழ்வதாக ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியிருக்கிருர்கள். இரவல் காணிகளில் அமைந்த ஓட்டை ஒடிசல் குடிசைகளே இவர்களது உறைவிடம். மலசல கூடம் முதலான அடிப்படைச் சுகாதார வசதிகள் எதுவும் இவர்களை எட்டிப் பார்ப்பதில்லை. இளம் பராயத்தினர்க்கு அடிப்படைக்கல்விதானும் கிட்டுவதில்லை. வறுமை நிலை காரணமாக 'கையெழுத்திடப் படித்தால் போதும்' 'எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்தால் போதும்' என்ற எல்லைக் கோட்டைக் கீறியே பெற்ரோர்கள் பிள்ளைகளை கல்விபயில விடுகிருர்கள். இத்தகைய இழிவான வாழ்நிலையை அனுபவித்து வருவது போதாதென்று அவர்களது மரண ஓலங்களை அரியாசனத்திலிருந்து இரசிப்பதற்காக பல இலட்சக்கணக்கானவர்களின் வாக்குரிமை கூடப் பிடுங்கப்பட்டது. நாடற்றவர்களென நாமம் சூட்டப்பட்ட மக்கள் பலவந்தமாகநாடுகடத்தப்படுகிருர்கள். இவ் அவல நிலையுடன் இனக்கலவரங்கள் முதலான இன்னேரன்ன தமிழ் தேசிய இனத்தை திட்டமிட்டு அடக்கி ஒடுக்கி அழிக்கும்—நடவடிக்கைகளே இச்'சுதந்திர' தினத்தின் பின் மக்கள் பெற்று வந்ததும் வருவதுமான அனுபவங்களாகும்.

1948ம் ஆண்டு முதல் இன்றுவரை மக்கள் அனுபவித்து வந்தவற்றை துணையாக வைத்துப் பார்ப்பவர்க்கு சுதந்திரம் பற்றிய பேச்சு போலியான தொன்றென்று புரியும். இவ்வாறு இதனைப் புரிந்து கொள்ள மறுப்பவர்கள் 'சுதந்திரம் பெருத மக்களைக் கொண்ட நாடே சுதந்திரம் பெற்ற நாடென' போதிக்க முயல்பவராவர் ஆனல், இலங்கையை ஒரு சுதந்திரம் பெற்ற நாடாக வலிந்து வர்ணிக்கும் இவர்களிடம் வேறு உள் நோக்கம் எதுவும் இல்லாமலுமில்லை. இவ்வுள்நோக்கை 1948ம் ஆண்டுக்கு முன்னும் பின்னுமாக நடந்த சில சரித்திர நிகழ்வுகளை மீட்டுப்பார்க்கும் போது இனங்கண்டு கொள்ளமுடியும்.

## சொத்துடையவருக்கு மாத்திரம் வாக்குரிமை?

ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்த காலத்தில் சீர்திருத்தப் போர்வையில் பல அரசியற் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. அவற்றில் 1931 இல் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட டொனமூர் அரசியற்திட்டம் பிரதானமானது. இதுவே சர்வஜன வாக்குரிமை இலங்கையருக்கு வழங்கியது இக்காலத்தில் இவ்வரசியற்திட்டம் அமுலுக்கு வருமுன் டொனமூர் குழுவினர் இலங்கையிலிருந்த பல கட்சிகளிடமிருந்தும் குழுக்களிடமிருந்தும் சீர்திருத்த ஆலோசனைகளைப் பெற்றனர். அச்சந்தர்ப்பத்தில் இங்கு பிரபலமடைந்திருந்த இலங்கை தேசிய காங்கிரஸ் டொனமூர் குழுவினர் முன்னிலையில் வருடத்துக்கு 600 ருபாவுக்கு குறைந்த வருமானமுடையவருக்கு வாக்குரிமை வழங்கக் கூடாதென வாதிட்டது. சொத்துடையவருக்கே வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென்றும், சொத்தற்றவர்கள் நாட்டுப் பற்றற்றவர்களென்றும், அவர்கள் வாக்குரிமையை தாறுமாருக உபயோகப்படுத்துவரெனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இத்தகைய எண்ணப்பாடு கொண்டிருந்த இலங்கை தேசிய காங்கிரஸ்தான் காலப்போக்கில் ஐக்கிய தேசியக் கட்சியாக 'பெயர்' மாற்றம் பெற்றது. 1948ம் ஆண்டு 10 இலட்சம் சொத்தற்ற தொழிலாளரின் வாக்குரிமையைப் பறித்து விட்டு 1981ம் ஆண்டு சர்வஜனவாக்குரிமைக்கான பொன் விழாவைக் கொண்டாடிய அற்புதமான கட்சியே இந்த ஐக்கிய தேசியக்கட்சியாகும்.

டொனமூர் அரசியற்திட்டத்தை அடுத்து 1947 இல் சோல்பரி அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தது. இந்த திட்டத்தின் கீழ், 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதியன்று இலங்கை ஓர் 'சுதந்திரம்' பெற்ற நாடென பிரகடனம் செய்யப்பட்டது.

சுதந்திரம் பற்றிய பிரகடனத்துடனே பிரித்தானிய ராணி இலங்கைக்கும் ராணியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். இந்த ராணியார் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரை இலங்கையின் மகாதேசாதிபதியாக நியமிக்கும் அதிகாரத்தை பெற்ருர். பிரித்தானிய ராணியாரிடமே இலங்கைக்கான யுத்தப்பிரகடனம் செய்யும் அதிகாரமும் இருந்தது. மகாதேசாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டவும், இடைநிறுத்தவும், கலைக்கவும் அதிகாரமிருந்தது. தனக்கிசைவான சில முக்கிய நியமனங்களை இவரால் செய்ய முடியும். அத்துடன் நீதி நிர்வாகத்தின் கடைசித் தீர்ப்பு பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்த பிரிவுக் கவுன்சிலிடம் தான் இருந்தது. பிரித்தானியாவிடமிருந்து 'சுதந்திரம்' பெற்ற இலங்கையில் திருகோணமலை கடற்படைத்தளமும், கட்டு நாயக்கா விமானத் தளமும் பிரித்தானியர் ஆதிக்கத்திலிருந்தது.

பிரித்தானியாவிற்கும் இலங்கைக்குமிடையில் இருக்கும் ஆதிக்கத் தொடர்பை இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் காலப்போக்கில் துண்டிக்க பல வழிகளிலும் முயன்றும் அவர்களது வர்க்க நலன் சார்ந்த செயற்பாடுகள் முயற்சிக்குக் குந்தகம் விளைவித்தன. 1972 இல் ஏற்படுத்தப்பட்ட அரசமைப்புத் திட்டமும் 1978 இல் ஏற்படுத்தப்பட்ட அரசமைப்புத் திட்டமும் இதற்குச் சான்று பகர்கின்றன.

பிரித்தானியர் என்ன நோக்கை முக்கியமாகக் கொண்டு இலங்கையை தமது காலனித்துவ நாடாக்கினரோ அதே நோக்கை வேறு முகங்களைக் கொண்டு நிறைவேற்ற முற்பட்டனர். அதாவது நாட்டு வளத்தைக் கபடவழிகளில் தந்திரமாக அபகரிக்கும் நோக்கை 1948 இன்பின் 'பல் நாட்டு நிறுவனம்' என்ற போர்வைக்குள் நுழைந்து கொண்டு நிறைவேற்றி வருகின்றனர். சிங்கர் தையல் மெஷின், பாட்டா செருப்பு, உரவகைகள், சைக்கிள்கள் முதலியனவற்றை சந்தைப் படுத்தும் நிலையமாக இலங்கையை இந்நிறுவனம் மூலம் ஆக்கினர். இப்பிடி இன்றும் தொடர்கிறது. அதுமட்டுமன்றி பல் நாட்டு நிறுவனங்கள் மூலம் பிரித்தானியா உட்பட அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நடூகளும் இங்கு தலைகளை புதைத்துக் கொண்டன.

இம்முறையில் தான் இலங்கையின் மீது ஏனைய நாடுகளின் ஆதிக்கத்தை 'துண்டிக்க' எடுத்த முயற்சி அமைகிறது. இதனுல்தான் நாம் பெற்றதாகக் கூறப்படும் 'சுதந்திரம்' ஓர் தந்திரமென முடிவு கட்ட வேண்டியதாகிறது.

# வாசகர் வாக்கு

''தமிழீழம்'' என்ற கோரிக்கை பூர்ஷுவாஜனநாயக அரசியல் வாதிகளால் மக்களிடத்தில் முன்வைக்கப்படுகின்ற போதிலும், அதை அடைவதற்கான வழிமுறைகள் கையாளப்படாத போதிலும். அந்தக் கோரிக்கையின் நியாயமான அடிப்படைக் காரணிகள் கூட இதுவரை முன்வைக்கப்படவில்லை. இதனுலேயோ என்னவோ, இக்கோரிக்கை பிசுபிசுத்துப்போகும் நிலை தோற்றமளிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஆயினும் தமிழ்ப் பேசும் மக்களின் அடித்தளப் பிரச்சனைகளை முன்னிறுத்தி அவர்களின் தேசிய ரீதியிலான ஈழம் என்ற நியாயமான வேட்கை மக்களிடத்தில் ஏற்பட்டுவருகின்றன. இதற்கு தர்க்கீகம் அடித்தளமிட்டு வருவதைப் பார்க்கும் போது தமிழ்ப் பேசும் மக்களின் விமோசனம் வெகு தூரத்தில் இல்லை என்பது புலனுகின்றது.

உதயணன்
திருகோணமலை.

இலங்கையில் வாழுகின்ற அத்தனை தமிழ் பேசுகின்ற மக்களின் ஒருங்கிணைந்த கோரிக்கையாக ஈழம் முன்வைக்கப்படுவதும், இங்கு வாழுகின்ற மக்கள் மதத்தாலோ, பிரதேசத்தாலோ வர்க்க நலன்களினுல் வேறுபட்டிருந்தாலும் ஒரு இனத்தின் மூலாதாரமான மொழியால் பிணைக்கப்பட்டு ஈழவர் என்ற வங்கமைப்பாட்டில் அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்ப் பேசும் தேசிய இனத்தின் சமூக மாற்றத்திற்கு வழி வகுக்கப்படவேண்டியது இயங்கியல் நியதி. அந்த இயங்கியல் நெறி சார்ந்து சமூக மாற்றத்திற்கு வித்திட தர்க்கீகம் தன் பணியை செய்வதையிட்டு பெருமை கொள்வது மட்டுமல்ல எம்மையும் ஈடுபடுத்த முனைகின்ருேம்.

க. பரமலிங்கம்
பிராங் பேர்ட்
மேற்கு ஜேர்மனி.

நான் தர்க்கீகம் பத்திரிகையை சென்றவருட தொடக்கத்தில் 3, 4, பத்திரிகைகள் வாசித்துள்ளேன். பின் நான் இத்தாலி வந்ததால் வாசிக்க சந்தர்ப்பம் கிடைக்காமலிருந்த போது நண்பர் ஒருவர் மூலமாக 12ம், 13ம் வெளியீடுகளை வாசித்தேன். தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சனைகளை எல்லோருக்கும் வெளிப்படுத்தி சோர்வடைந்திருக்கும் நம் மக்களைத் தட்டி எழுப்ப வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டதால் பல நண்பர்களிடம் வாசிக்க கொடுத்தேன். என்னைப் போன்றே சோர்வடைந்திருந்த பல உள்ளங்களை தட்டி எழுப்பின. தர்க்கீகம் தொடர்ந்து வெளிவந்து எங்கள் சிந்தனைகளை அறிவுக் கூர்மைகளை தெளிவடையச் செய்யவேண்டும்,

மரியா
இத்தாலி.

மலையக மக்களின், வாழ்வுக்கு விமோசனம் இல்லையா? என்று எத்தனையோ நாட்கள் நான் கண்ணீர் வடித்ததுண்டு. தொழிற் சங்கங்கள் மக்களின் சந்தாப்பணத்தைப் பெற்று தங்கள் வயிற்றுப்பாட்டை பார்த்துக்கொள்வதற்காக அவ்வப்போது உரிமைகள் பற்றி கூக்குரலிடுவார்கள். அதற்குமேல் ஒரு வழியும் இல்லாமல் தொடர்ந்தும் வாழ்க்கையில் விரக்தியுற்று கஷ்டப்படுவோம். இந்த நிலையில் ஏக்கங்கொண்ட எங்கள் உள்ளங்களுக்கு புத்துணர்வு ஏற்படுத்தி எதிர்கால வாழ்வில் நம்பிக்கை யூட்டியுள்ளது. இப்படி எத்தனையோ உள்ளங்களை தட்டி எழுப்பி தென்பூட்ட தர்க்கீகம் தொடர்ந்து பாடுபட என் ஆசிகள்.

பூரணன்
வெலிமடை.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி, விமோசனமாக ஈழக் கோரிக்கையை முன்வைத்து, கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும் என்ற அடிப்படையில் தர்க்கீகம் தனது கருத்துக்களைக் கூறி சித்தாந்தத் தெளிவை ஏற்படுத்தி வருகிறது. ஆனுல் சிலர் ஈழக்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஈழச் செய்திகள் EELAM NEWS

மாசி/பங்குனி 1982 தர்க்கீகம் இணைப்பு


# அண்ணா 'பாணியில்' அமைச்சர்களை 'அணுகுகிறோம்'

— நவம்

''அறிஞர் அண்ணா டில்லியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தொகுதி அபிவிருத்தி, தமிழகத்தின் வளர்ச்சி என்பன விடுதலைக்கு முன்னோடி என உணர்ந்த அறிஞர் அண்ணா காங்கிரஸ் மந்திரிகளான காமராஜர், பக்தவக்சலம் போன்றவர்களை அழைத்து தொகுதிகளைச் சுற்றிக்காட்டியுள்ளார். அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் பங்கு பற்றி தமிழகத்தின் விடுதலை பற்றியும் உரையாற்றியுள்ளார். இதுபோன்ற காரியங்களைத்தான் கூட்டணியினரும் செய்கின்றார்கள்'' என தென்மராட்சி முத்தமிழ் கலைமன்ற ஆதரவில் நடந்த அண்ணா நினைவு தினக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''ஈழத் தமிழினத்தின் விடுதலைக்காக தமிழீழத்தை மலர்விக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் கூட்டணியினரின் கொள்கைகள் பல அண்ணாவின் கொள்கைகள் போன்றவையேயாகும். தமிழகத்தில் அண்ணா ஆட்சி தொடர்ந்து நீடித்து, நிலைத்து அசைக்க முடியாதிருப்பது போல், ஈழத்தமிழினத்தின் விடுதலையை வேண்டி நிற்கும் கூட்டணியாளரின் செல்வாக்கை எவராலும் குறைத்திட முடியாது'' எனக் குறிப்பிட்டார்.

பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வாலிபர்கள் சிலர் சலிப்படைந்தவர்களாக, தனிநாட்டுக் கோரிக்கையை அண்ணா கைவிட்டதைப் போல் தமிழீழக் கோரிக்கையும் கைவிடப்படலாம் என்பதையே நவம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதாகக் கூறிக்கொண்டனர்.

# அமைச்சர்களுக்கு மண்டியிட்டால் அபிவிருத்தி செய்யலாம்

— சிவா

''நாம் அமைச்சர்களுக்கு 'ஐயா' போட்டு மண்டியிட்டால் ஏதாவது அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தலாம். ஆனால் எம்மை மக்கள் ஐயா போடுமாறு அனுப்பவில்லை. மக்கள் இட்ட கட்டளையை நாம் ஒருபோதும் மீற மாட்டோம்'' என்று அரியாலை மேற்கு சனசமூகநிலைய மேல்மாடிக் கட்டிடத் திறப்பு விழா வைபவத்தில் பேசுகையில் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''எமது பகுதிகளை மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலமாவது அபிவிருத்தி செய்யலாம் என்ற ஒரே காரணத்திற்காகவே மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றோம். இது ஒரு வெறும் வட்டம் என்பதை இப்போது உணர்கிறோம். ஆனாலும் உதறித் தள்ளிவிடாது இன்னும் சில காலம் பொறுத்திருந்து இதன் செயற்பாடுகளை அவதானிப்போம்' என்று கூறினார்.

# மலையக சிறுவர்கள் குத்தகைக்கு விற்பனை

தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களை குத்தகை அடிப்படையில் பணம் கொடுத்து வாங்கி, அடிமை வேலைகளுக்கு வடக்கே உள்ள முதலாளிகளுக்கு விற்கும் வியாபாரம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

மன்னார் ரயிலில் ஏற்றிச் செல்லப்பட இருந்த 32தோட்டச் சிறுவர்கள் பொல்காவலையில் பொலிசாரால் மீட்கப்பட்டனர். அத்தோடு சிறுவர் வியாபாரம் நடத்தும் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் ஹற்றன், நாவலப்பிட்டி, கொத்மலை, தலவாக்கலை ஆகிய தோட்டப்பகுதிகளிலிருந்து பணம் கொடுத்து வாங்கப்பட்ட தமிழ்ச் சிறுவர்கள் எனத் தெரியவந்திருக்கிறது.

மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலுள்ள மீன் முதலாளிகள், தரகர்கள் மூலம் இச்சிறுவர்களை விலைக்கு வாங்கி கருவாடு பதனிடும் தொழில்களில் ஈடுபடுத்தி வருவதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

# பூண்டுலோயாவில் வேலை நிறுத்தம்!

## பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்

பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த 15,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பெரியசாமி என்பவர் நுவரெலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி தோட்டத்தில் ஏழு வருடகாலமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரின் தோட்டத்தை, தோட்டநிர்வாகம் பறித்து பயிர்களை அழித்தது, சிவலிங்கம் என்பவரின் வீட்டை பலாத்காரமாகப் பறித்தது, போன்ற சம்பவங்களை ஆட்சேபித்து அத்தோட்டத்தை சேர்ந்த 2500 தொழிலாளர்கள் இரண்டு வாரகாலமாக வேலை நிறுத்தம் செய்து வந்தனர். இதனை முறியடிக்கும் விதத்தில் தோட்ட நிர்வாகம் பொலிசாரின் உதவியை நாடி தொழிலாளர்களை பலவிதத்திலும் துன்புறுத்தி வந்ததாகக் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகவே தோட்டத்தில் வைத்து தொழிலாளி ஒருவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

## பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி

சகல இராணுவச் சிப்பாய்களுக்கும் பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சி அளித்து அவர்களை வட பகுதியில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்பதெனப் பாதுகாப்பு அமைச்சு திட்டம் இட்டுள்ளதாம்.

பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகளில் இருக்கும் 10ஆயிரம் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

# இலங்கை டி. ஐ. ஜி. பி. இலண்டனில் திருடினாராம்

இலங்கைப் பொலிஸ் சேவையின் பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. திரெல் குணதிலகா லண்டன் மாநகரில் உள்ள ஒக்ஸ்போட் வீதியில் உள்ள 'செல்வ்றிஜட்ஸ்' என்ற வியாபார தலத்தில் 53·80 பவுண் பெறுமதியான பொருட்களை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டார். இருதய சிகிச்சைக்காக அங்கு சென்றதாகக் கூறப்படும் பிரதி பொலிஸ் மாஅதிபர் குணதிலகா திருட்டுக் குற்றத்திற்காக மால்பரோ வீதியிலுள்ள நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டார்.

# புதிய ஐ. ஜி. பி. சிங்கம்

இலங்கையின் எட்டாவது புதிய பொலிஸ்மா அதிபராக (I. G. P.) திரு. ருத்திரா ராஜசிங்கம் 15-3-82 அன்று காலை பதவியேற்றார். கொழும்பிலேயே அதிககாலம் வாழ்ந்தவரான இவர் ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராவார்.

இவர் பதவி ஏற்றதும் செய்தியாளர்களைச் சந்தித்தபோது

★ புலிஇயக்கம் முதலான வடபகுதி பயங்கரவாத இயக்கங்களை பூண்டோடு ஒழிப்பதற்கு போதிய துப்புக்கள் கிடைத்துள்ளதாகக்கூறினார்.

★ பொலிசார் பொதுமக்களைத் துன்புறுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் கூறினார்.

★ அத்துடன் விக்ரர் தென்னக்கோன் தலைமையிலான சம்பள நிர்ணயசபை தெரிவித்த சிபார்சின்மீது பொலிசாருக்கு விரைவில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமெனவும் கூறினார்.

# 'கொலரா' நோயாலே கச்சதீவு உற்சவம் ரத்தாம்

## தமிழக அரசு மறுப்பு

மார்ச் 11-ந்திகதி ஆரம்பமாக இருந்த கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் பகுதியில் கொலரா நோய் பரவியிருப்பதாக சென்னையிலுள்ள உதவி இலங்கைத் தூதுவர் இலங்கை அரசுக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் கொலரா நோய் பரவியுள்ள காரணத்தினால் கச்சதீவு உற்சவம் ரத்து செய்யப்படுவதாகவும், தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் இலங்கை அரசு விடுத்த அறிவிப்பு பிழையானது என்றும், இராமேஸ்வரத்தில் கொலரா நோயால் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

# புதிய நூலகத்துக்கு அடிக்கல்

சென்ற ஆண்டு கலவரத்தின் போது எரிக்கப்பட்ட யாழ் பொதுசன நூல் நிலையத்தை மீள்வித்து புனரமைக்கும் பணியில் வைபரீதியாக இவ் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

# பீதியூட்டிய ரோந்து நடவடிக்கை

பலாலி ஆகாய விமானப் படையினர் பலாலி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு தாழ்வாகப் பறந்து தெல்லிப்பளைச்சந்தியில் சில நிமிடங்களுக்கு ஆகாயத்தில் வட்டமிட்டு நோட்டம் விட்டனர். அச்சமயம் தரை மார்க்கமாக ஆகாய விமானப்படையினரின் ஜீப் ஒன்றும் வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஹெலிகொப்டரில் ஆயுதம் தாங்கியபடி கீழே நோக்கிக் கொண்டிருந்த ஆகாயவிமானப் படையினரைக் கண்ட போது மக்கள் மத்தியில் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உபாலிக்கு உரிய இடம் சிறைக்கூடம்!

றெனி குமுறல்

இலங்கை உட்பட மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து கொங்கொங், பிரிட்டன், நியூயோர்க் ஆகிய நாடுகளிலும் பெரிய வர்த்தகப் புள்ளியாக விளங்கும் உபாலி விஜயவர்த்தனவைப்பற்றி நிதி அமைச்சர் றெனி டீ மெல் பாராளுமன்றத்தில் காரசாரமாகப் பிரஸ்தாபித்தார். அவர் பேச்சிலிருந்து பல ஆச்சரியமான விடயங்கள் வெளிவந்தன.

திரு. உபாலி விஜயவர்த்தனவிற்கு இலங்கையில் 10 கொம்பனிகளும், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, நியூயோர்க், கொங்கொங், பிரிட்டன் ஆகிய நாடுகளில் 16 கொம்பனிகளும் சொந்தமாக உள்ளனவாம். அதுமட்டுமல்ல மேலும் 10 கொம்பனிகளை மறை முகமாக வைத்திருப்பதாகவும், திரு. டீ மெல் கூறினர்.

வெளிநாடுகளில் உபாலியின் மொத்த விற்பனை 5 கோடி ரூபாவாகும். இவர் விற்பனை வரியாக வெளிநாடுகளில் 1 கோடி ரூபாவை செலுத்தியும் வருகிருர். இது இவ்வாறிருக்க செலவாணிக் கட்டுப்பாட்டாளருக்கு உபாலி எழுத்து மூலமாக வெளிநாடுகளில் தனக்கு சொத்துக்களோ, வருமானமோ, பொறுப்புக்களோ, சேமிப்புக் கணக்கில் பணமோ எதுவும் கிடையாது என தெரிவித்துள்ளார்.

திரு. உபாலியின் இத்தகைய நடவடிக்கையாலேயே 'சிறைக்கூடமே உபாலிக்கு உரிய இடமென' டீ மெல் கர்ச்சித்தார்

கொழும்பு விசால பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக ஜனதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த திருவாளர் உபாலி ஜனதிபதியின் விருப்பத்திற்கு மாருக தனது பதவியையும் இராஜினமாச் செய்தது பலரும் அறிந்ததே இக்காலங்களில் ஜனதிபதி தேர்தலுக்கு போட்டியிடும் உள்நோக்கம் உபாலிக்கு இருப்பதாகவும் வதந்திகள் கிளம்பின.

## கூட்டணி சுறுசுறுப்படைகிறது!

தெல்லிப்பளையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயம் இயங்கவிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'உதய சூரியன்' பத்திரிகையை மீண்டும் ஏப்பிரல் மாதம் முதல் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர் பேரவையையும், இளைஞர் பேரவையையும் புது இரத்தம் பாய்ச்சி திரும்பவும் செயற்பட வைக்கவேண்டுமென்றும், கூட்டணிக் கிளைகளை தொகுதிகள் தோறும் மீண்டும் திறக்க வேண்டும் எனவும் பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனை கேள்வியுற்ற இளைஞர்கள் 'தேர்தல் கால திறத்தல் தொடங்குவதாக'க் கூறிக்கொள்கின்றனர்.

## பிடி ஆணை!

கடந்த ஆண்டு யூன் மாதம் சுன்னகத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது கொலை, கொள்ளை, தீவைப்புச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பதின்மூன்று பொலிசார் மீது மல்லாகம் நீதிபதி பிடிஆணை பிறப்பித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முன்பு கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் பர்த்தலோமிஸ், சார்ஜன்ட் ரஞ்சித்கருணரத்ன, சுன்னகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் ஜெயதிலகா மற்றும் 13 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீதான கொலை, கொள்ளை, தீவைப்பு வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. கே. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் எடுக்கப்பட்டது. 16 பொலிசாரில் எவரும் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை.

இவர்களில் மூவருக்கு உடனடியாக அழைப்பாணை அனுப்பும்படியும், ஏனைய 13 பேரையும் கைதுசெய்து மூடிய வாகனத்தில் கொண்டுவந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்,

# கொலை கொள்ளை

★ வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 60 ஆயிரத்து 817 ரூபா பணம் ஊர்காவற்துறையிலுள்ள வங்கியில் வைப்புச் செய்வதற்காக அதிகாரி ஒருவர் பஸ்சில் எடுத்துச்சென்றுகொண்டிருந்தபோது பஸ்சில் ஏறிய 4 பேர் அந்த அதிகாரியை துப்பாக்கியைக்காட்டி பணத்தைப் பறித்துக்கொண்டு பஸ்ஸை மறித்து இறங்கி சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

★ கொழும்பிலிருந்து மன்னர் சென்றுகொண்டிருந்த லொறியொன்று வவுனியாவில் வழிமறிக்கப்பட்டு ஆயுதமுனையில் சாரதியிடமிருந்து 52 ஆயிரம் ரூபா பணமும் கைக்கடிகாரமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

★ வல்வெட்டித்துறை நடராசர வீதியைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஜெய்சங்கர் (23 வயது) என்பவர் இரவு 7–30 மணியளவில் தனது சகோதரி வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானர்.

★ பண்டத் தரிப்பிலுள்ள தேவாலயம் ஒன்றில் ஆணின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டு பிரேத பரிசோதனை முடிந்து 10 நாட்களின் பின் எவராலும் அடையாளம் காணப்படாத நிலையில் அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை நடாத்திய யாழ். சட்டவைத்தியஅதிகாரி உணவு பற்ருக்குறையினுல் இம்மரணம் சம்பவித்ததாக தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

★ காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையின் 3-ம் கட்ட வேலைத்தள ஊழியர்களின் சம்பளப்பணமான 6, 80, 000 ரூபாவை கொள்ளையடிக்க முயன்ற இரு வாலிபர்கள் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். 15 - 3 - 82 அன்று ம. மரியாம்பிள்ளை, எஸ். சிவஞானதாஸ் ஆகிய இருவரும் காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையிலிருந்து ஆறுலட்சத்து எண்பதினுயிரம் ரூபாவை ரொக்கமாக எடுத்துக்கொண்டு தொழிற்சாலையை நோக்கி வந்தனர். இடைவழியில் ஊறணி என்னுமிடத்தில் ம. மரியாம்பிள்ளையின் வீட்டிற்குள் இவ்விருவரும் சென்றபோதே இவர்களைப் பின்தொடர்ந்து வந்த இரு வாலிபர்கள் துப்பாக்கி, பிஸ்டல் சகிதம் நுழைந்து பணப்பையை மிரட்டிப் பறிக்க முற்பட்டனர். இவ்வேளை நால்வருக்குமிடையில் இழுபறி ஏற்படவே வீட்டிலிருந்த பெண்கள் கூக்குரலிட்டனர். இதனுல் பொதுமக்கள் திரளவே வாலிபர்கள் ஓட்டம் பிடித்தனர். சைக்கிளில் தப்பியோட முயன்ற இவ் வாலிபர்களை மரியாம்பிள்ளையும், சிவஞானதாசும் காரில் துரத்திச் சென்றபோது வாலிபர்கள் சைக்கிளை நிலத்தில் போட்டுவிட்டு வீடு ஒன்றினுள் நுழைந்தனராம். அவ்வேளை பொதுமக்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து நையப் புடைத்தனர்.

★ இரவு நேரம் வீட்டிலிருந்த வாழைச்சேனை புகையிரத நிலைய அதிபரை துப்பாக்கி கத்திகள் சகிதம் பயமுறுத்தி ரயில் நிலையத்திற்கு அழைத்து வந்த முகமூடியணிந்த நால்வர் ஊழியர் சம்பளப் பணமான 38 ஆயிரம் ரூபாவையும் டிக்கட் வசூல் பணமான 300 ரூபாவையும் புகையிரத நிலைய உப அதிபர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையான மோதிரத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

★ பரந்தன் புகையிரத நிலையத்திற்கு ரயில்வே பகுதியிலிருந்து வந்த 75 ஆயிரம் ரூபா பணம் ரயில் நிலையத்தில் கையளிக்கப்பட்ட சிறிது நேரத்தில் கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது. பட்டப் பகலில் முகமூடி அணிந்த 3 துப்பாக்கி இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்.

## வவுனியாவில் இளைஞர் படுகொலை

வவுனியாவில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கறுத்தான் என்று அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் என்ற 24 வயது இளைஞன் கொல்லப்பட்டார். இறந்தவரின் இல்லத்தை ஆயுதப் படையினர் சோதனையிட்டபோது அங்கு 10 றைபிள்கள், துவக்குகள், தோட்டாக்கள், கெற்புகள், தொலை நோக்கி ஆகியன இருந்ததாக கூறப்படுகிறது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமானவையாக இருக்கலாம் என்றும் இறந்தவருக்கு உமாவுடன் தொடர்பு இருக்கிறது என்றும் பொலிஸ் வட்டாரத்தில் நம்பப்படுகிறது.

இவரது மரண விசாரணையில் இது ஒரு நியாயப்படுத்தப்பட்ட கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கொலையுண்ட கிருஷ்ணகுமாரின் விசாரணைகளின்பின் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதலின்போது வவனியாவிலுள்ள தேநீர்ச்சாலைகளில் வைத்து சவரிமுத்து பிரபாகரன், பூலோகசிங்கம் பாபு, எஸ். ஏ. அலெக்சாண்டர் ஆகிய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

## வீடு வீடாகச் சோதனை

குறிகட்டுவான் இறங்கும் துறையில் இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து துப்பாக்கி இளைஞர்களை தேடி முப்படையினரும் தீவிர வேட்டையில் இறங்கியுள்ளனர்.

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, பனிப்புலம் ஆகிய பகுதிகளில் வீடுவீடாக இராணுவத்தினர் சோதனை நடத்தினர். வடபகுதிக் கரையோரப் பகுதிகளில் ரோந்து பலப்படுத்தப்பட்டதுடன், சந்தேகத்துக்கிடமான இடங்கள் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டன. யாழ்-மாவட்டத்தில் ஹெலி கொப்டர் வட்டமிட ஆயுதப்படையினர் சோதனை நடத்திவருகின்றனர்.

## இராணுவம் கொன்றது

இரவு ரோந்து சுற்றித்திரிந்த இராணுவ வீரரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர், ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானர்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான கந்தையா நவரெத்தினம் ஒரு கார்ச் சாரதி என்றும், முக்கியமாக விவசாயம் செய்பவர் என்றும் சொல்லப்படுகிறது. இவரது இடது கால் ஊனமுற்றுள்ளதுடன் வலது காலும் சுகவீனப்பட்டு 'பண்டேஜ்' சுற்றப்பட்டிருந்தது.

திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி விழாவுக்கு செல்வதற்கு தனது காரை அச்சுவேலி இராஜ வீதியிலுள்ள தனியார் வீட்டில் வைத்து பழுது பார்த்துவிட்டு, சைக்கிளில் தமது வீட்டுக்குச் செல்லும் பொழுதே மேற்படி சம்பவம் நிகழ்ந்ததாம். திருக்கேதீஸ்வரம் செல்வதற்காக அடகு நகை ஒன்றை மீள்வதற்கு எடுத்துச் சென்ற 4,000 ரூபாவும், கைக்கடிகாரம், மற்றும் சைக்கிள் பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

## ஆறு இளைஞர் கைது

வடபகுதியில் அண்மையில் நிகழ்ந்த கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் றிவோல்வர்களையும், துப்பாக்கியையும், துப்பாக்கி ரவைகளையும் ஆயுதப்படையினர் கைப்பற்றி விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

வசாவிளானிலும், குரும்பசிட்டியிலும் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

### முப்பதுபேர் கைது

குறிகட்டுவான் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகத்தின்மீது முப்பது பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

### கறுப்புக் கொடிகள் பறந்தன

வைகாசி 4–ந் திகதிஅன்று காங்கேசன்துறை, புன்னலைக் கட்டுவன், அற்பைசந்தி, புன்னலைக்கட்டுவன் விநாயகர் ஆலயம், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழமாணவர்களின் எதிர்காலம் என்ன?

இன்றைய இளம் மாணவர்களை மட்டுமன்றி, அவர்கள்தம் பெற்றோர்களை மட்டுமன்றி, ஈழவர் சமுதாயத்தையே உறுத்திக் கொண்டிருக்கிறது. இதன் பின்னணிக்காரணம் கடந்த 25 ஆண்டுகளாக ஸ்ரீலங்கா அரசாங்கம் அனுஷ்டித்து வந்த பாரபட்சமானதும் இன ஒடுக்கல் தன்மை வாய்ந்ததுமான கல்வித் திட்டக் கொள்கையே.

1956-ம் ஆண்டு பண்டாரநாயக்கா அரசாங்கம் அமுல் நடாத்திய தனிச் சிங்களச் சட்டம் முதல் ஆரம்பித்து, பின் 1967-ம் ஆண்டுமுதல் அனுஷ்டிக்கப்பட்டு வந்த ''தரப்படுத்தல்'' நியதியின் மூலம் இலங்கைவாழ் தமிழ்பேசும் மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பைப் படிப்படியாக இழந்து வந்தனர். இந்த வாய்ப்பை மலையகப் பகுதிகளில், உயர்மட்டத்து வசதி வாய்ப்புள்ளவரல்லாதோர் என்றே இழந்தவர்களாயிருந்தார்கள். இதன் உச்சாணிக் கட்டமே கடந்த பல்கலைக்கழகத் தேர்வு அனுமதியில், ஈழ மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயமற்ற இடங்கள். இந்த நிலை தொடரும் பட்சத்தில் ஈழமாணவர்களின் எதிர்காலம் என்னவென விஞ எழுப்பவேண்டியது அவசியமே.

### இளம் சந்ததியின் பொறுப்பு

ஒரு இனத்தின் சமுதாயத்தின் எதிர்காலமும் அந்த இனம், சமுதாயம் கடந்த காலத்தில் கட்டிக்காத்து வந்த பரம்பரைப் பாரம்பரியத்தை எதிர்காலத்திலும் அதன் அடிச்சுவடிகள் அழிந்துபோகா வண்ணமும் முன்னேறும் வண்ணமும் கட்டிக் காத்துக்கொள்ளும் பொறுப்பு, வரலாற்றுச் சந்ததித் தொடர்பின் இணைப்பும் பிணைப்புமான இளம் சமுதாயத்தினதே! இந்த இளம் சமுதாயத்தில் மாணவர்களின் அங்கமும் பங்கும் முக்கியமானது.

### ஆங்கிலேயரின் கல்வியால் எமக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

ஒரு இனத்திற்கு வாய்க்கும் கல்வித்திட்ட வசதிக்கேற்பவே அந்த இனத்தின் மாணவ சமுதாயம் தமக்கும் தமது இனத்துக்கும் உகந்த கல்வியைப் பெற்று அறிவியலை வளர்ப்பதோடு அதனடிப்படையிலான சமூக பொருளியலையும் கலை கலாச்சார ரீதியிலான அரசியலையும் வளர்த்துக் கொள்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, அந்நியர் ஆட்சியில், முக்கியமாக வெள்ளையர் ஆட்சியில் இலங்கையில் தமிழ் பேசுவோருக்கு கொடுக்கப்பட்ட கல்வி வாய்ப்பின்படி ஆளும் ஆட்சியினரை அடிவருடி வாழும் வர்க்கத்தை ஞலேயே இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னும் பின்னும் இலங்கை அரசாங்க சேவைகளிலும் ஏனைய முக்கிய தொழில் நுட்ப நிலையங்களிலும் மற்றும் சமூகசேவைகளிலும் ஆங்கிலம் படித்தவர்களாகவும், ''டாக்டர்கள், எஞ்சினியர்கள், ஆசிரியர்கள்'' என பட்டம் பெற்றவர்களாகவும் தமிழர்கள் இருந்தார்கள். இதனுலேயே தமிழர்கள் தமிழ்ப் பகுதிகளை விட்டு கொழும்பு போன்ற ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். அதனுல் அவர்கள்தம் பரம்பரைப் பிரதேசங்களை அவர்கள் அபிவிருத்தி செய்யாமல், வளம் படுத்தப்படாமல் விடுபட்டதால், இன்று குடியேற்றங்கள் என்றபெயரில் சிங்கள மக்களை அரசாங்கம் குடியேற்றி வருகிறது. இதைக் கண்டு கூக்குரலிடுபவர்கள் தமது இனத்தின், தமிழ் சமுதாயத்தின் சமூக பொருளியல் அபிவிருத்திக்கான மாற்றுத் திட்டங்களையோ அல்லது கல்விப் போதனு முறைகளையோ தந்ததாகத் தெரியவில்லை. இன்றைய சூழ்நிலைக்கு அடிப்படைக் காரணமான மக்களுக்கான சமூக பொருளியல் மாற்றத்தைக் காணுத முன்னைய ஆங்கில மோகமும் அடிவருடி வாழும் (Subservient class) சுபாவத்தை ஏற்படுத்திய கல்விப் போதனுமுறையை, அக் கல்விப் போதனு முறையால் பாதிக்கப்பட்ட மாணவர்களை தமது பிரச்சனையே தமிழர் பிரச்சனை எனக்கருதி அவையும் பேரவையும் உருவாக்கியவர்கள் இக் கல்விமுறையை மாற்றுவதில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இல்லாவிட்டால் தமிழ் மாணவருக்கு உயர் கல்வி வாய்ப்பு குன்றிவந்த காலத்தில் கூட ''மாட்டின்லூலக்கொட்'' என்ற ''கார்டியன்'' ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் ''கல்வித்திறமைகளை ஏற்றுமதி செய்யும் சமுதாயமே இலங்கைத் தமிழ் சமுதாயம்'' என 1976ல் எழுதி இருக்கமாட்டார். இதையிட்டு பெருமைப்படும் அதே நேரத்தில் அதனுல் நாளாவட்டம் குடியேற்றம், இன ஒடுக்கல், கட்டாய நாடுகடத்தல் என்பதனுல் பாதிக்கப்பட்டுவரும் இலங்கைவாழ் தமிழர்களின் சமூக பொருளியல் சீர்குலைவதையும், அதனுல் உருவாகும் அரசியல் இழப்புகளையும் கண்டு, கண்மூடித்தனமாக இருந்துவிட முடியாது.

இதனுலேயே, ஈழவரின் எதிர்காலத்துக்கான புதிய யுகத்தையும் சகாப்தத்தையும் உருவாக்க நினைக்கும்போது; அந்த ஈழவரின் இளம் சந்ததியின் அங்கமான மாணவர்களுக்கான எதிர்காலம் என்னவென கேட்கவேண்டியுள்ளது.

### வெளிநாடுகளில் கல்வி பயிலும் மாணவர் தொகை

1967ம் ஆண்டு முதல் கல்வி வாய்ப்பை தமிழ் மாணவர்கள் இழந்தபோதும் தமிழ் பகுதியில் முக்கியமாக வடக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்கள் பலர் தமது மேற்படிப்பை வேறு நாடுகளில் முக்கியமாக இங்கிலாந்தில் மேற்கொண்டனர். இதனுல் 1968 முதல் 1978 வரை 10,000க்கும் மேலான மாணவர்கள் வெளிநாடுகளில் உயர் கல்வி பெற்றுள்ளனர். ஆனுல் இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அதனுல் ஏற்பட்ட உயர் பல்கலைக் கட்டண நிலையும் ஏனைய தடைகளும், இங்கிலாந்தில் மேலும் கல்விபயிலும் வாய்ப்பை இலங்கை மாணவர்கள் படிப்படியாக இழந்து இவ்வாண்டு ஆயிரத்துக்கும் குறைவான மாணவர்களே படிக்கின்றனர் இதற்குக் காரணம் 1968ம் ஆண்டில் வருடத்துக்கு 250 பவுண் அளவில் இருந்த கல்லூரிக்கட்டணம் இவ்வாண்டு 3000 பவுண் வரை (ரூபா 1, 20, 000 /–) உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அடுத்தடுத்த ஆண்டில், 150க்கு உட்பட்ட மாணவர்களே படிப்பார்கள். இதேபோல் ஜேர்மனியிலும் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இருந்தும் இவர்கள் தமது உயர் கல்வி வாய்ப்பை அபிவிருத்தி செய்யமுடியாத நிலையிலுள்ளார்கள். இந்தநிலையில் வெளிநாடுகளில் உயர் கல்வி பெறும் வாய்ப்பு அற்று இருக்கும் தமிழ் மாணவர்கள் தமது எதிர்காலத்துக்கு தமது அண்டை நாடான தமிழ் நாட்டையே நம்பியிருக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள்.

இங்கு மற்றுமொரு உண்மையை உணர வேண்டும். அதாவது ''உயர்கல்வி நமது மக்களின் சமூக பொருளியல் நிலையும் அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருக்கவேண்டும்''. இந்த வகையில் கடந்தகாலத்தில், மாணவர்கள் இலங்கையிலும், வெளி நாடுகளிலும் பெற்ற கல்வி, எந்த வகையிலும், ஈழத்தின், ஏன் ஈழவரின் சமூக பொருளியல் மாற்றத்தை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் அமையவில்லை. இதன் பிரதிபலிப்பை இன்று நிதர்சனமாகவே காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணத்துக்கு வெளிநாடுகளுக்கு முக்கியமாக இங்கிலாந்து சென்று படித்த மாணவர்கள் அந்த நாட்டிலேயும், புதிய வாய்ப்பு என்ற விதத்தில் மத்தியகிழக்கு — ஆபிரிக்க நாடுகளிலும் தொழில் செய்கிறுர்கள். இதனுல் ஈழம், தனது சமூக பொருளியல் அபிவிருத்தி செய்யக் கூடிய இளம் சந்ததியை இழந்து வருகிறது.

இந்த நிலையில்தான் ஈழ மாணவர்களின் எதிர்காலத்தைத் தர்க்கிகக் கண்கொண்டு எங்கவேண்டிய சூழ்நிலையிலுள்ளது. இதனுலேயே ''தமிழ் திட்டங்களையும் அதனுல் ஈழத்தில் பிரதிபலிக்கக் கூடிய சமூக பொருளியல் மேம்பாடுகளையும் கருத்தில் கொண்டு, தமிழ் நாட்டில் பயிலக்கூடிய உயர் கல்வித் துறைகள் பற்றிய விபரங்கள் எமது அடுத்த இதழில் வெளிவரும்.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்ற அரசியல்வாதம் என்னவோ உண்மை! ஆனுல் நேற்றைய மாணவர் இன்றைய குடும்பஸ்தராகவும் இருக்கிறுர்கள். குடும்பஸ்தர்களாக இருந்தாலும் பல்வேறு துறைகளில், முக்கியமாக தொழில் துறைகளில் தலைவர்களாக இருக்கிறுர்கள். அத்தகைய தொழில் துறை மையமான தலைமையிலடிப்படையான சமூகப் பொருளியல் மாற்றத்தின் மூலந்தான் ஈழம், ஈழவரின் மேம்பாட்டையும் அரசியல் ஸ்திரத்தையும், வலுப்படுத்தலாம் என்பது தர்க்கிகம். இதைவிட்டு காலத்துக்குக் காலம் மாணவர் உரிமைகள் என கூக்குரல் எழுப்பி ''பேரவைகள்'' இன்னும் மாமன்றங்கள் என்றும் கட்டுவதால் ஈழவர் பிரச்சினை தீர்ந்துவிடாது.

## 'பட்டமரம் தழைக்கா..''

பாட்டாலே துயர் போக்கி,
பாட்டாளிதனை காக்க,
ஏட்டிலே வடித்த கவி,
ஏறவில்லை ஏனோ பார்;
வீட்டிலே வேளைக்கு,
விருந்துண்டு மகிழ்ந்தார்க்கு,
நாட்டிலே ஏழை மக்கள்,
''நா'' வரண்டு வாடுவது,
பாட்டில் கூறிப் புரியாது;
பாவமவர்கள் படித்தவரே,
பாட்டும் பொருளுமுணர்ந்தாரே,
பட்டம் ''பெற்ற மேதைகளே'',
ஏட்டையெலாம் புரட்டியுடன்,
ஏப்பம் விட்ட ''பேதைகளே'',
எட்டவில்லை புத்திக்கேனே,
ஏழை மக்கள் வாட்டம்!
ஏட்டையெல்லாம் புரட்டியுடன்,
ஏப்பம் விட்டென்ன பயன்,
நாட்டையே நிரப்பிடுமிந்,
நாதியற்ருேர் கதி என்ன,
நாட்டையே உடைமையாக்கும்
நல்லதொரு வழி காண்போம்.
கோட்டையிலே நீர் வாழ்ந்து,
கொட்டாவி விடுகின்றீர்,
கொட்டிலிலே அவன் வாழ்ந்து,
கோட்டையினை நோக்குகின்ருன்.
எட்டியுமை உதைக்க ஏற்ற
புரட்சிதனை நடத்துகிருன்.
கொட்டம் இடுகின்றீர் கொடுமை
பல புரிந்து கொண்டு
தட்டி உம்மை இறக்கும்
தகுந்ததொரு திட்டம்
பாட்டாளி வர்க்க ஆட்சி
என ஓதுகின்ருன்.
காட்டெருமை போலுழைத்தும்
களித்திருக்கும் நீரன்ருே
பட்டமரம் தழைக்காப்
பழம் கதை பேசுகிறீர்
பட்டுவிடவில்லை இன்னும்
சட்டம் அதை
உடைக்கின்ற காலம் வரும்
பொறுத்திருப்போம்.

— வட்டூர் சீலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழவர் இடர் தீர...

**"இன்னொரு சொல்லினைக் கேட்டேன்"**
**என்று பாடி,**
**பாரதி மனம் புழுங்கியது**
**"மெல்லத் தமிழினிச் சாகும்" என**
**வேண்டத்தகாத கூற்றினை "வெள்ளையன்"**
**ஒருவன் கூறிவிட்டான் என்பதற்காக,**

ஆனால், "தன்னாட்சி"யற்ற தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் இன்றுவரை தமிழ் வழக்கொழியவில்லை. ஏன்! என்றென்றும் தமிழ் சாகாத மொழியாக, அழியாத மொழியாக இருக்கும் என்பது திண்ணம். இது கடந்த ஈராயிரம் ஆண்டு வரலாற்று இயங்கியல் நியதியான உண்மையில் உறுதியளிக்கிறது.

ஒரு மொழி அழியாது, வழக்கொழியாது இருப்பதற்கு அம்மொழியைப் பேசும் மக்களின் சமூக பொருளியல் அடிப்படையிலான 'குமுகாய' அமைப்பையும், வளர்ச்சியையும், பரிமாணத்தையும் பொறுத்துள்ளது.

## ஈழவரின் பெருமையும் அமிரின் கூற்றும்

"நல்லுநகர் நாவலர் இல்லையேல் சொல்லு தமிழ் எங்கே; சுருதி எங்கே" என்று சொல்லுமளவிற்கு, செயற்பாட்டினால் கால மாற்றத்திற்கேற்ப தமிழ் எழுத்துக்களையும், தமிழ் இலக்கணத்தையும் அச்சேற்றி மொழியைப் பேணியபெருமை ஈழவருக்குண்டு. அந்தப் பெரும் பாரம்பரிய பணியைப் பேணவும், அதைக் கட்டிக் காக்கவேண்டிய பொறுப்பும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு, இன்று ஈழவர் தம் தலைமேற் பணியுள்ளது. இதனாற்றான் மொழி வழக்கொழியாமல் இருக்க, அந்த மொழியைப் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் சமூக பொருளியல் அடிப்படையிலான 'குமுகாய' சூழலைப் பேணவே, இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள், தாம் வாழும் பகுதிகளை, "நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்; நமக்கே உரிமையாச்சு என்பதறிந்தோம். பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்" எனக்கூறி சுயநிர்ணயம் கோருகிறார்கள். இந்தச் சுயநிர்ணய பாங்கில் ஈடுபடும்போது, அதில் ஈடுபடுபவர்களை "இனங்கண்டு" அவர்களுக்குச் சூழுரைக்கும் வண்ணம் "இன்னொரு சொல்லினைக் கேட்டோம்." அதையும் கூறக்கூடாதவர் கூறியதாகக் கேட்டோம். வேறுயாருமல்ல; தலைவர் திரு. அமிர்தலிங்கமே. அதையும் லண்டனில் கூறினாராம்.

அண்மையில் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இங்கிலாந்து சென்றிருந்தார் அல்லவா? சர்வதேச பாராளுமன்ற அமைப்புக்கெல்லாம் அடிப்படையான 'தாய்'எனக் கருதப்படும் (MOTHER OF PARLIAMENTS) பிரித்தானிய பாராளுமன்றமான "வெஸ்ட் மினிஸ்டர்" (WEST MINISTER) அவையின் செயற்பாட்டையும் அதையொட்டிய உலகப் பேரவையின் செயற்பாட்டையும் அவதானிக்கவும், அமைப்பின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுமே இலங்கை பாராளுமன்றத்து எதிர்க்கட்சித் தலைவர் இங்கிலாந்து சென்றார் என்பது நாடறிந்த உண்மை. அங்கு 'லண்டன்' விஜயத்துக்கான உத்தியோக பூர்வமான கருமங்களைக் கவனிக்க வேண்டியதால், லண்டன் தமிழர்களுடன் பரவலான பேச்சுக்களோ இல்லை; பிரமாண்டமான பொதுக் கூட்டமோ (அதாவது, 1979—ல் 'வெஸ்ட் மினிஸ்டர்" மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம்போல்) எதுவும் இடம்பெறவில்லை. இருந்தும் ஆங்காங்கே உள்ளவர்கள் தத்தமது நலன்பாட்டிற்கிணைய திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்தும் உபசரித்தும் கருத்து விளக்கம் கேட்டுள்ளார்கள். அத்தோடு விம்பிள்டனிலுள்ள "லிட்டில் ஹாலில்" (LITTLE HALL) மார்ச் ?1—ம் திகதி ஒரு கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டம் 1979—க் கூட்டத்தில் ஏற்பட்ட "அமளி துமளி" எதுவுமில்லாமல் நடைபெற்றதை அறிந்து வாழ்த்துகிறோம். ஏனென்றால், விரும்பியோ, விரும்பாமலோ இலங்கைவாழ் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் விடுதலைக் கூட்டணியின் தலைமையையும் அதன்மூலம் திரு. அமிர்தலிங்கத்தைத் தலைவராகவும் ஏற்றுக் கொண்டுள்ளபோது, அத்தகைய தலைமையை மக்கள் நிராகரிக்கும்வரை அல்லது ஜனநாயக சக்திக்குப் பதிலான விடுதலைச் சக்தி உருவாகும்வரை திரு. அமிர்தலிங்கத்துக்கும், கூட்டணிக்கும் பண்பாட்டு மரியாதை செலுத்த வேண்டியது அவசியமும் அரசியல் நாகரிகமுமாகும்.

அதுவும், முக்கியமாக வெளிநாடுகளில் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் தமது இதய அபிலாசையை உலக அரங்கில் வைக்க முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு முனையும்போது, அந்த மக்களின் தலைமையை வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் அவதூறு பண்ணுவது புத்திசாலித்தனமில்லை. ஆனால், புத்திசாலித்தனமான திறனாய்வு செய்வது தர்க்கீகமே.

## இலண்டன் கூட்டம்

கிட்டத்தட்ட முப்பதுனாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழும் லண்டனில் அதுவும், "குட்டி வெள்ளவத்தை" எனக் கருதப்படும் விம்பிள்டனில் நடைபெற்ற கூட்டத்துக்கு நூற்றைப்பதுக்கு உள்ளும் புறமுமான தொகையினரே கலந்து கொண்டனராம். இதைக் கூட்டணியின் லண்டன் கிளையே ஏற்பாடு செய்திருந்தபோதும், கூட்டணியில் அபிமானப்பற்றும், திரு. அமிர்தலிங்கத்தின்மீது மானசீக மரியாதையும் கொண்டோர் பலரும் பங்குபற்றினராம். ஏன், 'தமிழர் கூட்டு அமைப்பின்' தனிநபர் தலைவர் ஐ.நா. சபை புகழ் 'ஜிம்பிக்' வைகுந்தவாசன்கூட பங்குபற்றினராம். இதனாலோ என்னவோ தலைவரின் பேச்சு வைகுந்தவாசனையும் அவரது "தமிழீழ" பிரகடனத்தையும் கிண்டல் செய்வதாக அமைந்தது. ஏன், மட்டந்தட்டுவதாக இருந்ததுஎனக் கூறினும் மிகையாகாது.

வைகுந்தவாசனின் 82 தை பொங்கல் தமிழீழ பிரகடனத்துக்குக் கூட்டணி 'ஒப்புதலும் இணக்கமும்' தெரிவிக்காததிற்குக் காரணம் கற்பிக்கும்போது. "அத்தகைய ஒரு பிரகடனத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்திருந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்" என்றும், "மக்களைக் காப்பாற்றுவதற்காகவே தாம் ஆதரிக்கவில்லை" எனவும், அதனால் அதை நிராகரித்ததாகவும் தலைவர் கூறினார். மேலும், 'தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும்,' 'தமிழர் கூட்டு அமைப்புக்கும்' மேற்படி பிரகடனத்தால் ஏற்படக்கூடிய மனக் குரோதங்களைத் தவிர்க்கும் வண்ணமாக முன்கூட்டியே பொங்கல் பிரகடனத்தைக் கைவிடுமாறு 'பெரியார் வைகுந்தவாசனை'த் தாம் கேட்டதாகவும் கூறினார். அதற்கு, "தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என அவர் நின்றால் நான் என்ன செய்வது" எனவும் கேட்டு, அதனாற்றான் அது புஸ்வாணமாகியது எனக் கேலிக்குரல் எழுப்பி, மேலும் "ஈழத்துக்கு வந்தால் தன்னை அரசு கைதுசெய்ய மாட்டாது என உத்தரவாதம் தந்தால்தான் வருவேன் என்று சொல்பவர் எப்படித் தமிழீழத்தை லண்டனில் பிரகடனப் படுத்த முடியும்" என்று கேட்டுவிட்டு, சிங்கள இனக்குரோதவாதிகளுடைய வீம்புப் பிரசாரங்களையும் சில சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்ட இனக்குரோதமான கலவரத்தைத் தூண்டும் செய்திகளையும் முன்வைத்து. அதன்நிமிட்டம் 1982 ஜனவரி மாதம் உருவாகியிருந்த பதட்ட நிலையையும் சுட்டிக்காட்டி அதனாலேயே "பிரகடனத்தால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகவே, அரசுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளைச் சுமூகப்படுத்தியது மட்டுமல்லாமல், ஐந்து அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறோம்" என்றாராம். அத்தோடு "இலங்கைத் தமிழர்களின் போராட்டம் ஈழத்திலேயன்றி, இங்கிலாந்திலோ அமெரிக்காவிலே அல்ல" என்பதை உறுதிப்படுத்த திரு. வைகுந்தவாசன் தனது அறிக்கையில் "தமிழீழ பிரகடனத்துக்கு" உதாரணமாகக் குறிப்பிட்ட வேறு தேசிய பிரகடனங்களின் பின்னணியையும் சூட்சுமத்தையும் விளக்கும் முகமாக இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின்போது சுபாஸ் சந்திரபோஸ் சிங்கப்பூரில் வைத்துச் செய்த பிரகடனத்தையும், அயர்லாந்து பிரகடனத்தையும் எடுத்துக் கூறினர். இந்த இரு சந்தர்ப்பங்களிலும் பிரகடனம் செய்தவர்களுக்கு வேறு நாடுகளின் ஆதரவும், உதவியும் இருந்ததாகவும் அப்படியான சூழ்நிலை "தமிழீழ பிரகடனத்துக்கு" தற்போது இல்லையெனவும் தெரிவித்தார். இருந்தும், "நம் மக்கள் நமக்களித்த தமிழீழக் கோரிக்கையை நாம் கைவிடவில்லை. அதற்காகப் போராடுவோம், அப்போராட்டம் ஈழத்திலன்றி, இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ அல்ல என வலியுறுத்திவிட்டு, "தமிழீழ பிரகடனம்போல் இங்கிலாந்திலிருந்தும், வேறு நேடுகளிலிருந்தும் ஈழத்தில் இயக்கம் நடத்துகிறார்கள். இது உருப்படாது" என்ற கூறத்தகாத வார்த்தையையும் கூறினாராம் தலைவர். இதையேநாம் ஆரம்பத்தில் பாரதியை கோட்பாடிட்டுக் கூறி, இன்னொரு சொல்லினைக் கேட்டோம். இதைக் கூறக்கூடாதவர் கூறக்கேட்டோம்" என்றோம். இக்கூற்றைத் திறனாய்வு செய்யவேண்டியது தர்க்கீகவாதிகளின் கடமை.

## உலக அரங்கில் தமிழர் பிரச்சினை


இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையை, இலங்கைப் பாராளுமன்றத்தும் தமிழ் பிரதிநிதிகள் அவ்வப்போது வெளிநாடுகளிலுள்ள சர்வதேச பாராளுமன்ற சம்மேளனக் கூட்டங்களிலும், ஏனைய அவைகளிலும் பங்குபற்றும்போது, 'நாடு தழுவிய பிரச்சனைகளில் தமிழர் பிரச்சனையை ஒன்றாகவும்' பிரஸ்தாபித்து வந்துள்ளார்கள் என்பது உண்மை. அதில் முக்கியமாக சாவகச்சேரி பிரதிநிதி திரு. 'வி. என்' கூடிய பங்களிப்பைச் செய்துள்ளார் என்றால் மிகையாகாது. அணிமைக் காலத்தில் திரு. வி. என்.னும், அவர் தலைவரும் தமிழர் பிரச்சினையை வெறும் உரிமைப் பிரச்சனையாக மட்டுமல்லாமல், "இன விடுதலை"ப் பிரச்சனையாக உலக அவையில் வற்புறுத்தி வருவது, அவர்களுடைய தவிர்க்கமுடியாத பொறுப்பை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் அத்தகைய முயற்சியால் சர்வதேச அரங்கில் உள்ள உள்நாட்டுப் பிரச்சனை தெரியப்படுத்தப் பட்டதேயன்றி, ஏனைய நாட்டுமக்கள் அறியக்கூடிய வகையில் உலகரங்கில் பரவலாக வைக்கப்படவில்லை. ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினையை உலகரங்கில் வைத்தவர்கள் வெளிநாட்டிலுள்ள தமிழர்களும், அவர்கள் சார்ந்த பொதுநல நிறுவனங்களுமே!

இந்த வகையில் இலங்கைத் தமிழர் பிரச்சனையை ஏனைய நாடுகளிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்சனைகள்போல் ஒன்றாக, மேலெழுந்தவாரியான ஆங்கில ஆய்வொன்றை லண்டனிலுள்ள "சிறுபான்மை உரிமைக் கழகம்" (MINORITY RIGHTS GROUP) என்ற ஸ்தாபனம் வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் லண்டனிலுள்ள தமிழர்கள். இதேபோல் "கார்டியன்" (GUARDIAN) போன்ற பத்திரிகைகள் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையை வங்காள தேசத்திலுள்ள 'பிகாரிகள்,' சைப்பிரஸ் தீவிலுள்ள 'துருக்கியர்கள்' போன்று உலக அரங்கில் வைப்பதற்குக் காரணமான ஆதாரபூர்வமான ஆய்வுகளை நடாத்தியவர்கள் இங்கிலாந்தில் உள்ள ஆராய்ச்சியாளர்களே. இதேபோல் தலைவர் அமிர்தலிங்கம் பாராட்டுமளவிற்கு, ஐ. நா. சபையில் பரபரப்பூட்டும் சம்பவத்தை ஏற்படுத்திய திரு. வைகுந்தவாசன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சனையை அமெரிக்க மக்கள் அறிவதற்கும் பின் அதைத் தொடர்ந்து அமெரிக்காவிலுள்ள தமிழர்கள், "மஸெஸ்சூசெட்" பிரகடனம் செய்து கொண்டதும், அதே அடிப்படையில் 'தமிழீழப் பிரகடனத்தை' திரு. வைகுந்தவாசன் மேற்கொண்டதும் இயங்கியல் நியதியே. அதாவது ஒரு நாட்டிலுள்ள மக்கள் அழிவுறும்போது, அந்த நாட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





டைச் சேர்ந்த மக்கள் வேறு நாடுகளில் இருக்கும் போது அதைப் பராமுகமாக இருக்கமாட்டார்கள், தத்தமது வர்க்க நலன்பாட்டிற் கேற்பவும் கொள்கை கோட்பாட்டிற் கேற்பவும் தம்மாலான கைங்கரியங்களில் ஈடுபடுவார்கள். இதையே மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகிறது. இச் செயற்பாடுகளுக்கு ஈழத்து நிகழ்ச்சிகளும், முக்கியமாக இனக் கலவரங்களும், அதற்கான காரணங்களும் தவிர, தமிழர் தம் போராட்ட அணிகளும் போராளிகள் என்ற போர்வையில் வன்முறைகளும் காரணகர்த்தா வாகிறது என்பதையும் மறுக்க முடியாது. இதன் தார்ப்பரியத்தைத் தலைவர் அமிர்தலிங்கம் அவ்வப்போது கூறுவதுபோல், மேற்படி கைங்கரியங்கள் '' முற்போக்கோ, பிற்போக்கோ இல்லை, வயிற்றுப்போக்கோ '' என ஆராயவேண்டியது தர்க்கீகவாதிகளின் கடமை.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் தத்தமது 'சுயாதீனத்திற் கேற்பவும்,' 'சித்தத் தெளிவிற் கேற்பவும்,' கைங்கரியங்களில் ஈடுபடும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் போக்குக்கு ஒத்தும்—ஒத்துவராமலும், சார்ந்தும்—சாராமலும் முரண்பட்டும் செயல்படுவது தவிர்க்கமுடியாத நிதர்சனமான இயங்கியல் நியதி. இல்லாவிட்டால் தலைவர் திரு. [illegible]-ல், லண்டனில் வைத்து குத்து விளக்கேற்றி ஆரம்பித்துவைத்த ''தமிழர் கூட்டு அமைப்பு'' இப்போ அவரால் மழுங்கடிக்கப்படும் தோரணையில் லண்டன் கூட்டணிக் கிளைக் கூட்டத்தில் பேசியிருப்பாரா ? எனக் கேட்கத் தோன்றுசிறது.

## பரபரப்பூட்டும் கைங்கரியங்களும் காலாவதியாகுவதும்

'தமிழர் கூட்டு அமைப்பு' ஒரு தனிநபர் அமைப்பென்றாலும், அதன் பிரகடனம் எப்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ''தமிழீழ''க் கோரிக்கை 1977 தேர்தலுக்கு முன்னும் பின்னும் மக்களுக்கு பரபரப்பூட்டியதோ, அதேபோல் பலவந்தமான பரபரப்பூட்டியுள்ளது என்பதை யதார்த்த வாதிகள்கூட மறக்கமாட்டார்கள். திரு. வைகுந்தவாசனின் 'தமிழீழப் பிரகடனம்' புஸ்வாணமாகியது போல், 'தமிழீழக் கோரிக்கை'யும் புஸ்வாணமாகுமா ?எனக் கேட்கத் தோன்றுகிறது.

இங்கு தர்க்கீகவாதிகள் மற்றுமொரு அடிப்படை உண்மையை உணரவேண்டும். பூர்சுவா ஜனநாயகவாதிகள் தமது அரசியல் தேவைக்கேற்ப பரபரப்பூட்டும் '' கைங்கரியங்களை ''க் கையாளுவார்கள். பின் கைவிட்டு விடுவார்கள். வைகுந்தவாசனும், தமிழர் கூட்டு அமைப்பும், பிரகடனமும் தேவைக்கேற்ப காலாவதியாகிவிட்டது. இதே போன்றுதான் வெறும் உணர்ச்சியில் உந்தப்பட்டு நடைபெறும் ' பரபரப்பூட்டும் ' '' கைங்கரியங்கள் '' கூட. அவை தான்தோன்றித் தனமான தன்னிச்சைக்காரரினதும், சமூகக் கிராதகர்களினதும் நடவடிக்கைகள். அவை, 'தர்க்கீகத்துக்கும்,' மக்கள் போராட்ட நெறிக்கும் புறம்பானவை.

## ''தமிழீழம்'' அடிப்படை மாற்றத்திற்கு வித்திடுமா ?

'தமிழீழப் பிரகடனத்தின்' பாரதூரமான விபரத்தை விளக்கும்போது, வைகுந்தவாசன் தனது அறிக்கையில் குறிப்பிடாத சுபாஸ்சந்திர போசின் இந்திய சுதந்திர பிரகடனத்தையும் மக்குருக்களின் அயர்லாந்து பிரகடனத்தையும் குறிப்பிட்டார் தலைவர். சுபாஸ் சந்திரபோசின் பிரகடனம் சரிவராமல் போவதற்குக் காரணமாய் இருந்தது இந்திய பூர்சுவா ஜனநாயக இயக்கமான இந்தியக் காங்கிரசும், அதன் போக்குக்கான பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் சூட்சுமமுமே ! இந்தியா சுதந்திரத்தைப் பெயரளவில் பெற்றும், அதன் பொருளாதாரப்பிடி இந்திய முதலாளியத்திடமும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமும் தான் இருந்தது. அதனால்தான் இன்றும்கூட, கோடானுகோடி மக்கள் பூரண விடுதலையற்றுப் புண்பட்டு வாழுகிறார்கள். இப்படியான 'தமிழீழம்'தானா தமிழர் விடுதலைக் கூட்டணி நாடுகிறது எனக் கேட்கத் தோன்றுகிறது.

## தேசியவாதிகளும் அரசியல்வாதிகளும் மக்கள் சகாப்தத் தலைவர்களுக்குப் புறம்பானவர்களே !

இங்கு மற்றுமொரு அடிப்படை உண்மையை உணரவேண்டும். அதாவது இந்தியாவுக்கு 'பூர்சுவா ஜனநாயக' சுதந்திரம் கிடைப்பதற்குக்கூட, அடிப்படை இயக்க நிலைப்பாட்டுக்கு வழிகோலப்பட்டது இங்கிலாந்தில்தான். 'காந்திமகான்' இங்கிலாந்தில் கல்விகற்றபோதும், பண்டிதர் ஜவஹர்லால் இங்கிலாந்தில் கல்விகற்றபோதும் ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான இந்தியர் சுதந்திரத்திற்கு வித்திட்டு, பின் அரசியல் மேதை கிருஷ்ண மேனனும் அவரது இந்தியா ஆங்கில நண்பர்களாலும் வருவாக்கப்பட்ட 'இந்தியர் லீக்' என்ற ஸ்தாபனமே இந்திய காங்கிரசுக்கும், இந்திய சுதந்திர போராட்டத்துக்கும் உந்து சக்தியாக இருந்தது. இதே காலகட்டத்தில்தான் இங்கிலாந்தில் கல்விகற்ற பல ஆசிய, ஆபிரிக்க நாட்டு மாணவர்கள் தத்தமது நாட்டு விடுதலைக்கு வழிகோலினர். ஏன் காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் சொலமன் றிட்சேட் டயஸ் பண்டாரநாயக்காகூட தேசியவாதியாவதற்கான காரணம் அவரது 'ஆக்ஸ் போர்ட்' கல்விப்படிப்பே. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மாணவ மன்றத்தின் தலைவராகத் தகுதியாக இருந்தும், அவரை ஆங்கிலேயரல்லாதவர் என்பதற்காக, மாணவமன்றத் தலைவராக்கப் படவில்லை. அன்றுமுதல் 'வெள்ளி நாக்குப் பேச்சாளி' (SILVER TOUNGUE ORATOR) என்றும் பின் பெயர்பெற்ற பண்டாரநாயக்கா தேசியவாதியாக மாறியதுமட்டுமல்லாமல், சுதேச ஆடையும் அணியத் தொடங்கினர். இங்கிலாந்தில் கல்விகற்றாலும், நமது 'ஐம்பதுக்கு ஐம்பது' ஜீ. ஜீ. போன்னம்பலம், தேசியவாதியாகாமல், மற்றும் டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன போன்று வெவ்வேறு கருத்துடைய அரசியல்வாதியானர்.

இதற்காக வெளிநாடுகளில் கல்விகற்றும் அனுபவம் பெற்றுந்தான் தலைவர்களாக வேண்டியதில்லை. மார்க்சிய லெனினிய அடிப்படையில் சோசலிசத்தை ஒரு நாட்டில் (SOCIALISM IN ONE COUTRY) நிலைப்பாடடையச் செய்த ஸ்டாலின்,, செஞ்சீனாவின் மாவோ, வியட்நாமின் ஹோச்சிமின் சிம்பாவேயின் முக்காபே போன்றோர் ஏகாதிபத்திய நாடுகளின் தலைநகரங்களில் கல்விகற்கவில்லை. அதனாலோ என்னவே, இவர்கள் தேசியவாதிகள் (BOURSCISE NATIONALISTS), அரசியல் வாதிகள் (POLITICIANS) என்ற நிலைப்பாட்டுக்கு அப்பாற்பட்டு புதியமக்கள் சகாப்த தலைவர்களானார்கள்.

இந்த அடிப்படையில்தான் தந்தை செல்வாகூட ஜனநாயக ரீதியில், இலங்கைத் தமிழர்களுக்கென புதிய சகாப்தத்தை உருவாக்க முனைந்த உன்னத மக்கள் தலைவரானர். அவர் கூட்டிய கூட்டணியின் இன்றைய தலைவரே திரு. அமிர்தலிங்கம். திரு. அமிர்தலிங்கம், ''கொண்ட கொள்கைக்காகவும், கோரிக்கைக்காகவும், பிடிவாதமாகவும், திடசங்கற்பமாகவும் போராடுவார்'' என்பதை வெளிப்படையாகக்கூற 'தர்க்கீகம்' தவறவில்லை. ஆனால், அவ்வப்போது 'பிரச்சனைகளையும்' 'சூழ்நிலைகளையும்' கையாளும் விதத்தில்தான் சில சமயங்களில் ஒரு ஒட்டுமொத்தமான ஜனநாயக அரசியல் போராட்டத்தில் தலைவருக்கு இருக்க வேண்டிய அரசியல் சாணக்கியத்தனத்தையும், நாகரீகப்பண்பையும் அசட்டை செய்துவிடுகிறார். இதனால்தான் ''தந்தைக்குப்பின் தளபதி தலைவரா?'' எனக் கேட்டுவருகிறோம்.

## உருப்படாத சக்திகள் எது? அமிரின் அரசியல் தார்ப்பரியம்

இலங்கையில் தலைவர் வன்னியசிங்கமும், தந்தை செல்வாவும், ஏன் தளபதி அமிர்தலிங்கமும் கட்டிவளர்த்த வடக்கு – கிழக்கு – மலையக உறவு பூர்சுவா ஜனநாயகரீதியில் அஸ்தமித்துவிட்டது. (மக்கள் அடிப்படையில் அல்ல). எஞ்சியுள்ள கூட்டணியில்கூட குழறுபடிகள் தலைதூக்கத் தொடங்கி விட்டது. இன்றும் விடுதலைப் போராளிகள் என்ற போர்வையில் 'குத்து—வெட்டு' ஆரம்பித்துள்ளது. இந்தநிலையில் ஈழத்தமிழர்நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வரும்வேளையில், நம்மவர் நலன் கருதி, உழைக்கும் சக்திகளை மக்களடிப்படையில் ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக, 'இனங்கண்டு' அடையாளப்படுத்தும் வகையில் எச்சரிக்கை செய்வது அரசியல் நெறியல்ல. அத்தோடு, அத்தகைய சக்திகள் 'உருப்படாது'என அறுதியிட்டுக் கூறுவது அரசியல் தார்ப்பரியமுமல்ல. அத்துடன் இயங்கியலுக்கும், தர்க்கீகத்துக்கும் புறம்பானது. இதற்குப் பல சரித்திரரீதியான உதாரணங்கள் உண்டு. இங்கு திரு. வைகுந்தவாசன் சுட்டிக்காட்டிய 'போலந்து' உதாரணத்தை விளக்கவேண்டியுள்ளது. இன்று உலகப் பிரச்சனைகளுக்குள் உக்கிரமாக முடுக்கிவிடப்படும் பிரச்சனை 'போலந்துப் பிரச்சனை.' போலந்தில் கடந்த 37 ஆண்டுகளாக நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் சோசலிச ஆட்சியை முடியடிக்க முதலாளிய சக்திகளும், அதன் ஏவலாளிகளும், சாதனங்களும் எத்தனித்து வருவதை 'தர்க்கீக' வாசகர்கள் நன்கு அறிவார்கள். இந்தப் போலந்து சோசலிச மயமாவதற்குமுன் 1939–ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்பேரில் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் நாட்டுக்கும், நாசி ஹிட்லருடைய ஜெர்மனிக்கு மிடையே இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அதற்குமுன் போலந்தை ஆட்சிசெய்த மன்னர் பீட்டர் ஜெர்மனியருடைய ஆக்ரோச தாக்குதலுக்கு நின்றுபிடிக்க முடியாது, முடியைக் கைவிட்டு, வெய்ரோவில் (எகிப்தில்) தலைமறைவாகி, பிரிட்டனுடைய உதவியுடன் 'இரகசிய அரசு' (EXILE IN GONT) நடாத்தி வரப்பட்டது. அதேவேளையில், பீட்டர் மன்னரின் படைத் தளபதிகளில் ஒருவரான மார்சல் சிக்கோர்ச்சி (SIKORSKI) லண்டனில் பிரிட்டனுடைய உதவியுடன் நாடற்றவர்களுக்கான உத்தியோக பூர்வமற்ற அரசொன்றை நிர்மாணித்து வந்தரர். இதையே திரு. வைகுந்தவாசனும் கூறுகிறார். ஆனால் அவர் கூறுவது அதே காலத்தில், சோவியத் பார்வைக் குட்பட்டிருந்த போலந்து பகுதியில், ''லூப்ளின்'' (LUBLIN) என்ற இடத்தில் போலந்து விடுதலை வீரர்கள் லூப்ளின் கமிட்டியாக ஆரம்பித்து, லூப்ளின் விடுதலை இயக்கம் நடாத்திவந்தார்கள் என்பதை இறுதியில், இவர்களே போலந்தை விடுவித்து, சுதந்திர சோசலிச போலந்தை அமைத்தார்கள். இந்த சரித்திர உண்மையை அதாவது வெளிநாடுகளில் கருவெடுக்கும் சக்திகள் உருப்படும் என்ற உண்மையை வள்ளுவர் வழியிலும்,

''அறிகொன்று அறியான்
எனினும்--உறுதி
உழையிருந்தான் கூறற் கடன்.''

எனக்கூறத் '' தர்க்கீகம் '' கடமைப்பட்டிருக்கிறது.

ஈழவர் தம் போராட்டத்தில் உந்து சக்தி எது. அது கருத்தில் உருப்பெற்று, சக்தியாய் ஆக்கம் பெற்று மக்கள் சக்தியாக விஷய காலந்தான் பதில் சொல்லும்.

* * *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்களூர்

# பழமை வாய்ந்த நெடுந்தீவு மக்களின் இன்னல் தீருமா?

இந்து சமுத்திரத்தில் முத்தாய் ஒளிர்வது இலங்கை. இலங்கையின் மணிமுடிபோல மைந்தது யாழ்ப்பாணம். அம் மணிமுடியிலே பதித்த இரத்தினங்களாக சப்த தீவுக்கூட்டங்கள். அச் சப்த தீவுக் கூட்டங்களில் மிகப் பெரியதும், நீளமானதுமே எங்கள் ஊராகிய நெடுந்தீவு. இதன் நீளம் சுமார் 7 மைல்கள். இதன் அகலம் சுமார் 4 மைல்கள். இதன் சுற்றளவு 36 மைல்களை யடக்கி கடலடித்தளத்திலிருந்து அண்ணளவாக 25' க்கு குறைவான உயரத்தில் அமைந்துகாணப்படுவதுடன், கடலலை, காற்று என்கின்ற உரிவுக் கருவிகளால் அரிக்கப்பட்டு ஒழுங்கற்ற பல்லுருவ அமைப்பில் இத் தீவின் தோற்றமோர் அமீபா வடிவிலமைந்துள்ளது. வடக்கே 7 மைல்கள் தொலைவில் நயினாதீவினையும் தெற்கே 18 மைல்கள் தொலைவில் கச்சதீவினையும், கிழக்கே 10 மைல்கள் தொலைவில் கக்கடதீவினையும், மேற்கே பரந்த பாக்கு நீரிணைத் தொடுகடலையும் எல்லையாகக் கொண்டமைந்துள்ள ஓர் கேந்திர ஸ்தானமாகும்.

எமதூராகிய நெடுந்தீவுக்கும் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்துத் தொடர்புக்கும் நெடுந்தீவு – குறிகட்டுவான் படகுச்சேவை உள்ளது. இதன் மூலம் பல்வேறு அலுவல்களையும், சமூக தொடர்புகளையும் எமதூர் மக்கள் மேற்கொள்கின்றனர்.

**வரலாறு:-**

இத் தீவுக் கூட்டங்களின் தோற்றம் பற்றி சில கர்ணபரம்பரையான கதைகளுண்டு. இராமாயணத்திலே, அனுமான்மூலிகையினை மறந்து மகேந்திர மலையினைக் கையிலேந்தி இலங்காபுரிக்கு திரும்பும்போது அம் மலையிலிருந்து உடைந்து விழுந்த துண்டங்கள் என பழமை நம்பிக்கையுடையோரும், இலங்கை தக்கணத்திலிருந்து பிரிந்து கடல்கோளாறுகளால் அரிப்புக்குட்பட்டு, அரிப்புக்குட்படாத எஞ்சிய எச்சங்கள் என புவியியலாளர்களும் கூறக்கிடக்கின்றது.

இந்தியாவிலிருந்து வந்து குடியேற்றங்கள் ஏற்படு முன்னரே இத் தீவகத்தில் மக்கள் வாழ்ந்து வருபவர்களாகவும், இக் குடியேற்றங்களேற்பட்ட பின்னரேற்பட்ட கலாச்சார பாரம்பரிய பின்னணிகளையும் காணக்கிடக்கின்றது. முதலிகளின் பெருமைகளை இன்னும் கட்டிக் காத்துக்கொண்டிருக்கும்இம்மக்களிடையே சாதிமிக எனினும் ஒருவரின் சுதந்திர வாழ்க்கைக்கு கேடு விளைவிக்கும் தன்மையில்லாமல் சகோதரத்துவ மனப்பாங்கு தற்போது நிலவிவருவதைக் காணலாம். எனினும் சாதியடிப்படையாகக்கொண்டே வாழ்விடம், வாழ்க்கைமுறை, கோவில்கள், கிணறுகள், குளங்கள் என்பன அமைந்துள்ளன.

**விவசாயம்:-**

இத் தீவினிலே பண்டை தொட்டு விவசாயம் முக்கிய தொழிலாகக் காணப்படுவதுடன் இன்று இதுதன் முக்கியத்துவத்தினை இழந்து காணப்படுகின்றது. ஏறக்குறைய கால் நூற்றுண்டுகளுக்குமுன் நெற்களஞ்சியமாக விளங்கியது. ஆனல் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டமையால் இடையிடையே ஏற்பட்ட சூருவளி தாக்குதல்களினல் கடல் நீர் உள்கொள்ளவே நிலப்பரப்பு உவராகி மண்ணரிப்பு ஏற்பட இன்று ஆயிரக்கணக்கான வயல்கள் வெறிச்சோடிக் கிடப்பதைக் காணலாம். இந் நிலையில் விவசாயத்திலீடுபட்டிருந்த மக்கள் குடியேற்றத் திட்டங்களுக்குப் படையெடுக்கலாயினர். இவ்வாறு சென்ற யக்கள் இன்று இலங்கையில் நெற்களஞ்சியங்களாக விளங்கும் கிளிநொச்சி முல்லைத்தீவு, பூநகரி போன்ற விவசாயக் குடியேற்றங்களில் முன்னணி விவசாயிகளாக முன்னேறியிருப்பதைக் காணலாம். சிறுதானிய செய்கையும் இப்பொழுது முன்புபோல் இல்லாமல் தொட்டம் தொட்டமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகிறது. இச் சிறுதானிய வகையுள் சாமை, மொண்டி, வரகு குரக்கன் போன்றவையடங்கும். காலபோகத்துடன் இணைந்த வெங்காய செய்கை வருடத்தில் ஒருமுறை பரவலாகவும், கணிசமாகவும், களிமண் காணப்படுமிடங்களில் விஷேடமாக செய்கை பண்ணப்படுகிறது. வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று காலத்திலேயே ஏனைய மிளகாய், புகையிலை போன்ற பயிர்கள் மிகவும் குறைவாகப் பயிர்ச்செய்கை பண்ணப்படுகிறது.

**கடற்தொழில்:-**

இங்கே கடற்தொழிலுக்கே அதிகவாய்ப்பளிக்கின்ற நிலமை காணப்படுகின்றது. கூடிய வருவாயினை கொடுக்கும் ஓர் தொழிலாகவும் அதிகமானோர் ஈடுபடும் தொழிலாகவும் உள்ளது. இங்கு ஏக காலமும் மீன்பிடி நடைபெறுகின்றது. வாடைக் காற்று, சோளகக்காற்று என்ற இரு வேறுபட்ட காலநிலையின் பிடிக்கும் பருவங்களை இங்குள்ள மீனவர் அறிவர். இத் தீவகம் அமைந்துள்ள கடலடித்தள மேடைகளும் மீன்பிடிக்கு உதவும் காரணியாக உள்ளது. மயிலிட்டி, தாளயடி செம்பியன்பற்று, காங்கேசன் துறை போன்ற இடங்களிலிருந்து காலாகால மீன்பிடிப் பருவக் காலங்களில் மீனவர்கள் வந்து வாடி வீடமைத்து கார்த்திகை — சித்திரைவரை மீன்பிடியிலீடுபடுவர். இங்கு மீன் வளங்கள் அதிகமிருந்தும் தொழில்முறை சிறப்பற்றிருக்கின்றது. காரணம் மீன்பிடி உபகரணங்கள், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் நிலை அற்றிருப்பதே. இங்குள்ள மீனவர்கள் பழமையான வழிமுறைகளையே இன்றும் கையாண்டு வாழ்க்கையை கஷ்டத்தின் மத்தியில் ஓட்டி வருகின்றனர்.

**பசுபதி ராஜா**

**கல்வி:-**

இங்கு மொத்தம் பதினன்குபாடசாலைகள் உள்ளன. ஆனல் இவற்றில் ஒரேயொரு பாடசாலை மட்டுமே உயர் கல்வியைக்கொண்ட மகா வித்தியாலயமாகவுள்ளது. இரண்டு பாடசாலைகள் சாதாரணதர கல்வியை போதிக்கின்றது. ஏனைய 11 பாடசாலைகளும் ஆரம்பக் கல்வியை மட்டும் புகட்டும் பாடசாலைகளாகவுள்ளன. ஆயினும் எத்தனையோ பிள்ளைகள் ஆரம்பக்கல்வியைக் கூட ஒழுங்காக பெற முடியாத நிலையில் வாழ்க்கைக் கஷ்டங்களுக் குள்ளாகியுள்ளனர். சிலர் ஆரம்பக் கல்வியை பெறக்கூடிய நிலையிருந்தும் உயர்தர கல்வியை பெற முடியாமல் இடையில் சறுக்கி விழுகின்றனர். சிலர் உயர்தரக் கல்வியைப் பெற்றும் மேற்படிப்பை மேற்கொள்வதில் கஷ்டப்படுகின்றனர். அப்படி ஒரு சிலர் கல்வியைப் பெற்றுக் கொண்டாலும் அதற்கேற்ற தொழில்வாய்ப்பின்றி அல்லற்படுகின்றனர். இப்படியே ஒவ்வொருவரும் இன்றைய சமூக அமைப்பின் சூருவளியினல் அல்லற்படுவதைக் காணலாம்.

**ஏனைய தொழில்கள்:-**

எமதூரில் வான்பயிர்களாக பனை, தென்னை போன்றவை கணிசமான அளவு இருப்பதால் இதனைப் பயன்படுத்தி குடிசைக் கைத்தொழிலைப் பலர் மேற்கொண்டு வருகின்றனர். பனையிலிருந்து பனை ஓலை மூலம் பாய், பெட்டி, கடகம் போன்றவற்றையும் பனம் பழத்திலிருந்து பனுட்டு போன்றவற்றினையும், கிழங்கிலிருந்து ஒடியல் போன்றவற்றையும் தயாரித்து ஓரளவு வருமானம் பெறுகின்றனர். மற்றும் மட்டை, உமல் போன்றவற்றையும் ஏற்றுமதி செய்கின்றனர்.

**அரசாங்க ஊழியர்கள்:—**

மிகவும் குறைவான விகிதமே அரசாங்க ஊழியர்களாகவுள்ளனர். அவர்களில் ஆசிரியர்கள், லிகிதர்கள், தபாலூழியர்கள், இ. போ. ச ஊழியர்

**வாழ்க்கைத்தரமும் குடிசனமும்**

இத் தீவகத்தின் முழு நிலப்பரப்பும் 15 வட்டாரங்களாக பிரித்து நிர்வகிக்கப் படுகின்றது. அத்துடன் மேற்கு, மத்தி கிழக்கு என நீளப்பக்கமாக பெரும் நிர்வாகப் பிரிவுடன் காணப்படுகின்றது. குடிசனம் மத்திய பகுதியிலேயே அதிகமாகவுள்ளது. மேற்கிலும் ஐதாகவே காணப்படுகின்றது. கூட்டு மொத்தமாக பார்க்கின் இத் தீவின் கால் பகுதியே குடிகளையடக்கி உள்ளதுடன் மிகுதி பரந்த வெளியாகவும் காடாகவும், கைவிடப்பட்ட குடிகளைக் கொண்டதாயும் உள்ளது. நடுக்குறிச்சிப் பகுதியிலேயே அலுவல் சார்ந்த நிலையங்கள் உண்டு. இதிற் தபாற்கந்தோர் ஒன்றும் பொலிஸ் நிலயம் ஒன்றும் உண்டு. தற்போது இராணுவத்தினர் காவல் புரியும் கேந்திர ஸ்தானமாகவும் விளங்குகின்றது.

எமதூர் பொருளாதாரத்தில் பின்தங்கியதோர் நிலையில் இருந்தாலும் கணிசமான வருமானம் உள்நாட்டு மூலவளங்களிலிருந்தே பெறப்படுகின்றது. இருந்தும் உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி சரிவர பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நிலையின்மையைக் காணலாம். மொத்தமாகச் சொல்லப்போனல் பொருளாதார நிலையில் முன்னேறிச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தும், முன்னேற்றத்திற்காக உழைப்போர் அதிகமிருந்தும் வசதிகள், உதவிகள் இன்றித் தவிப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் இன்றைய சமூக அமைப்பும் அதை பிரதிபலிக்கும், பாதுகாக்கும் அரசாங்கமும். இவற்றின் சீரழிவான பொருளாதாரப் போக்கினல் எமதூரும் சிக்கிச் சீரழிந்து இருக்கின்றது. இவற்றை நிவர்த்திசெய்து புதிய சமூக அமைப்பை உருவாக்குவதன் மூலம் தொழிலாள பாமர மக்களின் பொருளாதார கஷ்டங்களை, அனுபவிக்கும் இடர்களை அறவே களைந்தெறிய எமதூர் மக்களும் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

## தட்டிக் கேட்க வாருங்கள்

— புதுவை இரத்தினதுரை —

பச்சைரத்தம் வேர்வையாகப் பகலிரவாய்ப் பாடு
பட்டும்
மிச்சமென்ன கண்டுவிட்டோம் செல்லையா — ஒரு
பச்சைநோட்டைக் கண்டதுண்டோ சொல்லையா

சோஷலிசம் வருகுதென்று தெருத்தெருவாய் அழுதவரின்
வேஷலிசம் தெரியுதடா வீட்டிலே — இனிமேல்
பாசிசமும் வந்துவிடும் நாட்டிலே

அரிசிவிலை ஏறியேறி ''ஆனைவிலை'' ஆனபோது
தரிசுநிலம் உழுவமென்று சொன்னரே அதற்குப்
பரிசுதரப் போவதாகச் சொன்னரே

சொல்லிச்சொல்லி ஆண்டகூட்டம் சோஷலிசப்
பேரைச்சொல்லி
வெள்ளிவிழா கண்டதடா நாட்டிலே - இதற்கு
கொள்ளிவைக்க வேணுமடா ரோட்டிலே

காடுவெட்டிக் களனிசெய்து களனியெல்லாம் உழுது
வைச்சு
பாடுபட்டு நெல்விதைத்தும் செல்லையா - ஒரு
வீடுகட்டிப் பார்த்ததுண்டோ சொல்லையா

ஓடியோடி நெல்விதைத்து உரமெறிந்து பயிர்வளர்த்து
வாடிகட்டிக் காத்திருந்தும் என்னடா — எல்லாப்
போடிமாரின் வீட்டிலேதான் நெல்லடா

உள்ளியிலை ஆனையிலை உழுந்துவிலை குதிரைவிலை
சல்லிமட்டும் இல்லையடா செல்லையா - இதற்கு
கொள்ளிவைக்க வழியிருந்தால் சொல்லையா

புள்ளடிகள் கேட்டுவந்து புழுகுகின்ற கள்ளருக்குப்
பொல்லடிகள் போட்டனுப்பி வைப்போமே
-இனிமேல்
கள்ளிகளை வெட்டிவீழ்த்தி நிற்போமே

ஆமி, நேவி, பொலிசுக்காரன் ஆளுமிந்த அரசு
வெட்டிப்
பூமியெல்லாம் சிவந்துவரச் செய்வோமே - புரட்சி
ஆமியொன்றை நாமமைத்துக் கொள்வோமே.

பட்டினியால் நாம்கிடந்து பரிதவிக்கும் வேளையிலும
எட்டடுக்கு வாடிவீடு ஏனடா - இதைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'தமிழீழ'க்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் கஷ்டங்களுக்கு ஏதாவது செய்யலாம் என்ற பிரமையில் கோரிக்கையின் அவசியத்தை மறந்தமை. இதனுலேயே ''தர்க்கீகம்'', ''மாவட்ட சபை பற்றியதல்ல ஈழக் கோரிக்கை பற்றியதே இன்றைய பிரச்சனை'' என திரும்பத்திரும்ப அடித்துக் கூறி, ''மாவட்ட சபைத் தேர்தலில் ஈழக் கோரிக்கையின் அவசியத்தை வலியுறுத்தி கூறிவிட்டு அடுத்த பொதுத் தேர்தலிலும் பார்ப்போம் என இருந்துவிடாமல் அதை சாத்தியமாக்கும் கைங்கரியங்களில் ஈடுபட வேண்டும்' என வலியுறுத்தியது. ஆனுல் இதை உணர மறுத்ததன் விளைவே இன்று கூட்டணி எதிர்நோக்கியுள்ள விளைவுகள். இந்த மாவட்ட சபைகளின் போலியை தலைவர்கள் உணராமலில்லை. இல்லாவிட்டால் மாவட்ட சபை ''வெறுட் வட்டம்'' என கூட்டணி தலைவர்களால் கண்டனத்துக்குள்ளாகியிராது. ஆனுல் மாற்று நடவடிக்கை என்ன? என்பதிலேயே தெளிவில்லாத சிக்கல் அவர்களுக்குத் தோன்றியுள்ளது.

இத்தகைய சிக்கல்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் கோரிக்கையின் வெற்றுத் தன்மையே! இதனுலேயே இக் கோரிக்கையைக் கொண்டுள்ளவர்களின் வெற்றுத் தன்மையின் விளைவுகளில் ஒன்றே ''தனிமாவட்ட'' கோரிக்கை. ''தமிழீழ'க் கோரிக்கை எப்படி தமிழ் பேசும் பாமர தொழிலாள மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைக் கொண்டிருக்கவில்லையோ அது போலவே ''தனிமாவட்ட'' கோரிக்கையும் கிளிநொச்சி வாழ் சாதாரண பாமர மக்களின் பிரச்சனைகளைக் கொண்டிருக்கவில்லை.

## தனிமாவட்டக் கோரிக்கை பற்றிய சர்ச்சை

''தனிமாவட்ட'' கோரிக்கை முதல் முதலில் பாராளுமன்றத்தில் கிளிநொச்சி கூட்டணி உறுப்பினர் ஆனந்தசங்கரியினுல் எழுப்பப்பட்ட போதே, கட்சியின் பரிசீலனையில்லாமல் அல்லது இது பற்றி முன் எது விதத்திலும் தெரிவிக்காமல் ஒரு கட்சி உறுப்பினர் நடந்து கொள்வதா? என கட்சிக் குள்ளேயே பலத்த வாதம் எழுந்தது. ஆனந்தசங்கரிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற கருத்துக் கூட எழுப்பப்பட்டது. கட்சியின் சாதாரண கூட்டங்களிலும் சரி, பிரதான பொதுக்குழுக் கூட்டங்களிலும் சரி கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டு வந்த ஆனந்தசங்கரியின் போக்கின் மீது பல சந்தேகங்கள் எழுந்தது. இப்படியெல்லாம் நடந்து கொள்வதற்குக் காரணம் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் கிளிநொச்சி உறுப்பினர்க்கு முதன்மை இடம் கொடுக்கவில்லையே என்ற குரோதம் தான் என பலர் அபிப்பிராயப்பட்டனர். ஆனுல் கூட்டணி இதுபற்றி திடீர் 'முடிவு எடுக்காமல் தயங்கிக்கொண்டிருந்து, 'தனிமாவட்ட' கோரிக்கை வலுவாக எழுப்பப்பட்டது. இப்படி கட்சிக்குள்ளே ஏற்பட்ட முரண்பாடுகளை கருத்திற் கொண்டு அரசு அமைச்சர் காமினி திசநாயக்காவை கிளிநொச்சிக்கு உத்தியோக பூர்வ விஜயமாக அனுப்பியது. அமைச்சரின் விஜயத்தையொட்டி கிளிநொச்சி நகர மண்டபத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஆனந்தசங்கரியும் யாழ்மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர் நடராசாவும் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். ''கட்சியின் கட்டுப்பாட்டை மீறி இங்கு என்கருத்தை முன்வைக்க முடியாத நிலையிலுள்ளேன்'' என ஆனந்தசங்கரி மறைமுகமாக சுட்டிக்காட்டி பேசியதைத் தொடர்ந்து பேசிய மாவட்ட சபைத் தலைவர் நடராசா, ''தனிமாவட்ட'' கோரிக்கைக்கு எந்த விதத்திலும் இடம் கொடோம் என வலியுறுத்திஞர்.

இந்த நிலையிலேயே, ஆனந்த சங்கரி அழைக்கப்பட்டும் கலந்து கொள்ளாத கூட்டணி குழுக் கூட்டத்தில் ''தனிமாவட்ட'' கோரிக்கைபற்றி நேரடியாக சென்று கலந்துரையாடி முடிவு செய்யும் படி நான்கு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பட்ட குழுவில் பட்டிருப்பு எம். பி கணேசலிங்கம் கலந்து கொள்ளாத போதிலும் குழு கிளிநொச்சி நகர மண்டபத்தில் ஆனந்த சங்கரியினுல் கூட்டப்பட்ட கூட்டத்தில் கருத்துக்களை கேட்டது. அங்கு குழுமியிருந்தவர்கள் எல்லோரும் ''தனிமாவட்ட'' கோரிக்கையின் தார்ப்பரியங்களை தம் எண்ணப்பாட்டிற்கேற்ப வெல்லாம் முன்வைத்தனர். அதில் சமூக நோக்கற்ற குறுகிய மனுேநிலையிலான வாதங்களை அவதானிக்க முடிந்தது. ஆனுல் ஆராயப் புறப்பட்ட குழுவும் தமிழ் பேசும் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான பிரச்சனைகளை கருத்தில் கொண்டிருந்தால் தானே சரியான முறையில் விளக்கமளித்திருக்க முடியும். ஏதோ வெல்லாம் வாக்குவாதப்பட்டு இறுதியில் கோரிக்கை நியாயமானது என்ற உடன் பாட்டிற்கு வந்தனர். இதை கட்சியின் மேலிடத்திற்கு தெரிவிப்பதாகவும் தெரிவித்தனர், இதோடு புரபரப்பு ஒருவாறு தணிந்தது ஆனுல் முரண்பாடுகள் தீர்ந்ததா?

இப்படியான முரண்பாடுகள் கொண்ட வெறும் கோரிக்கையின் அடிப்படையிலேயே வெற்றுத்தனத்தின் விளிம்பில் தமிழ் பேசும் மக்களின் பூர்ஷுவா ஜனநாயக தலைமை இன்றிருக்கின்றது இது தன்னை சரியான முறையில் ஸ்திரப்படுத்தி மக்கள் மத்தியில் பலமான சக்தியாக உருவெடுக்க தன் கோரிக்கைகளின் வெற்றுத்தனத்திலிருந்து விடுபட்டு மக்கள் அடிப்படையில் சிந்தித்து தீர்க்கமான வழியில் மக்களை ஒன்றிணைக்க வேண்டியதும். சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டுடியதும் அவசியமானது. அப்போது தான் மக்களடிப்படையிலான மாற்றம ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை உருவெடுக்கும் வரை காலாகாலமாக பாடுபட்டு கட்டியெழுப்பப்பட்டுவந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதோ அந்த மாற்றத்திற்கும் ஆரம்பமாக விளங்க முடியும்.

# மலையக மக்களின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## கேரள மாநிலத்தில் குடியேற்றப்பட்டவர்களின் அவலநிலை

கேரளமாநிலத்தில் வண்டிப் பெரியார் என்னும் இடத்திலிருந்து 28 கி. மீற்றர் தொலைவிலுள்ள பஞ்சகானம் என்னும் காட்டு மலைப்பகுதிக்கு, ஏலக்காய் தோட்டம் உருவாக்கி வேலைசெய்ய,31-12-79 அன்று 108 குடும்பம் அனுப்பப்பட்டன. இவர்களுக்கு இருப்பிட வசதியாக கூரையும், நாலுபக்கச் சுவரும் புல்லினுல் வேயப்பட்ட சிறு குடிசைகளே வழங்கப்பட்டது. ஒரு குடும்பத்தில் நாற்பது வயதுக்குட்பட்ட இருவருக்கு மாத்திரமே வேலை வழங்கப்பட்டது. நாட் கூலியாக 11.57 பைசாவே வழங்கப்பட்டது'

இவர்கள் தமது பங்கீட்டுப் பொருட்களைப் பெறுவதற்கு 28 கி. மீற்றர் தொலைவிலுள்ள வண்டிப் பெரியாருக்கே சென்றுவர வேண்டியுள்ளது. இவர்களின் இருப்பிடத்திற்கும் வண்டிப் பெரியாருக்குமிடையே ஒரே ஒரு பேருந்து ஒரு நாளுக்கு ஒரு தடவை மாத்திரமே வந்து செல்கிறது. இதனுல் இவர்களின் பங்கீட்டுப் பொருட்கள் எடுத்துவருவதிலும் பல சிரமங்கள் ஏற்படுகின்றது.

எவ்வாறு இவர்களின் முன்னேர் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு காடுவெட்டி தோட்டம் உருவாக்கிஞர்களோ அதேபோல் இவர்களும் ஏலக்காய் தோட்டங்களை பஞ்சகானத்தில் உருவாக்கிஞர்கள். அங்கு இவர்களுக்கு குடிநீர் வசதிகளோ, சுகாதாரவசதிகளோ, பாடசாலைவசதிகளோ எதுவுமே செய்து கொடுக்கப்படவில்லை. அங்கு இவர்கள் குட்டையில் தேங்கியிருக்கும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தவேண்டியுள்ளது. இதனுல் நோய் நொடிகளுக்கும் ஆளாகிருர்கள். அண்மையில் ஒருசிறுவன் கடுமையான ஜீரம் ஏற்பட்டு துடிதுடித்து மாண்டான். இவர்களின் இருப்பிடத்திற்கு அண்மையில் வைத்தியர்களோ, வைத்தியசாலைகளோ இல்லை. குடிநீர் எடுக்கச்சென்ற சிறுவன் ஒருவன் குழிக்குள் வழுந்து இறந்த சம்பவம் அண்மையில் ஏற்பட்டுள்ளது. ஏலக்காய்த் தோட்டத்தில் வாழும் மக்கள் வாழ்க்கை வசதியற்ற இடத்தில் உயிருடன் போராடி வாழ்க்கை நடத்தி வந்தார்கள் இத்தோட்டத்தில் மழை பெய்தால் இவர்களுக்கு வேலைவழங்கப்படுவதில்லை. தொடர்ச்சியாக மழை பெய்த காரணத்தால் இவர்கள் தொடர்ந்து 10 நாட்களுக்குமேல் பட்டினி கிடக்க வேண்டிய துயரச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளது.

இவர்கள் இவ்வாறு அரை வயிற்ருேடும், பட்டினி கிடந்தும் தமது இரத்தத்தைப் பிழிந்து ஏலக்காய் தோட்டத்தை உருவாக்கிஞர்கள். இந்த அவல நிலையில் 14-12-81 அன்று நிர்வாகம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது. 2-3-83 இலிருந்து தோட்டம் மூடப்படும் எனவும், சகல வேலைகளும் நிறுத்தப்படும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவர்கள் ஏலக்காய் தோட்டத்தை உருவாக்கிவிட்டார்கள் நிர்வாகத்தினர்க்கு இவர்கள் தேவையற்றுப் போய்விட்டனர். நிர்வாகத்தினர் வேலையில்லை எனக் கூறி இவர்களின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிஞர்கள்.

இதைப்பற்றி அமைச்சர்களிடமும், புனர் வாழ்வு செயலகத்திலும் கூறி எதுவித பலனும் கிடைக்கவில்லை. இதன் பின் இவர்கள் மதுரைவந்து சேர்ந்துள்ளார்கள். இன்று ஏதுமற்ற அனுதைகளாய் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளார்கள்.

இவர்களை வேலைக்கமர்த்தும் நிறுவனங்களுக்கு, ஒரு குடும்பத்திற்டி 15,000 ரூபாப்படி மத்திய அரசின் அகதிகள் மறுவாழ்வு திட்டத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. இப்படியிருந்துமே இவர்கள் வாழ்வுக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமை.

இன்னுமொரு துயரச்சம்பவம் கோடைக்கானலில் 30 கி. மீற்றர்தூரத்திலுள்ள கோடைமலை என்னும் இடத்திலுள்ள குடியேற்றத்தில் இங்கிருந்து சென்றவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். அதுவும் ஒரு முதலாளியின் தோட்டந்தான் அங்கு செல்வியின் குடும்பமும் வேலை செய்து வந்தது. செல்வி என்னும் இவ் இளம்பெண், தோட்ட முதலாளியால் 04-10-81 அன்று கற்பழிக்கப்பட்ட சம்பவமும் நடந்துள்ளது. இதைத் தட்டிக்கேட்ட சகோதரர்கள் பயமுறுத்தப்பட்டார்கள். செல்வியின் குடும்பம் தங்கள் உயிரை தோட்ட முதலாளியிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தோட்டத்திலிருந்து தமது உடமைகளுடன் வெளியேறி கோடைக்கானலுக்கு நடந்துவந்தனர்.

கோடைக்கானல் அரசினர் வைத்தியசாலைக்கு செல்வி கொண்டுவரப்பட்டாள், அங்கு பணிபுரியும் பெண் டாக்டர் செல்வியை வேண்டாவெறுப்பாகப் பார்த்து, பரிசோதிக்க மறுத்துவிட்டார். தனியார் வைத்தியர்களும் சிகிச்சையளிக்க மறுத்துவிட்டார்கள். பின்னர் பிரபல்யமான தனியார் வைத்தியர் ஒருவர் கோடைக்கானல் வைத்தியப் பொறுப்பதிகாரிக்கு, செல்வியின் நிலைமை மோசமாகவுள்ளது எனவே சிகிச்சை அளிக்க வைத்தியசாலையில் அனுமதிக்கும் படி கடிதம் எழுதிஞர். செல்வி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள் ஆனுல் அப்பெண் டாக்டர் அவளுக்கு நல்ல சிகிச்சை அளிக்கவில்லை. இப்பெண்டாக்டர் செல்வியின் குடும்பத்தை தோட்ட முதலாளியுடன் சமாதானத்திற்கு உடன்படும்படி கேட்டார். ''செல்வி இதற்கு முன்பும் ஒரு கன்னிப் பெணுகத்தான் இருந்தாள் என்று தன்னுல் கூறமுடியாது'' ''பிரபல்யமான வைத்திய அதிகாரியின் அறிக்கை தவருனது'' எனவும் பெண் டாக்டர் கூறிஞர். இந்தப் பெண்டாக்டர் செல்வியை ஒரு பெண் இனமாகவே கருத மறுக்கிருர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தற்பொழுது செல்வி நீதிக்காகப் போராடாமல் உயிருடன் வாழ்வதற்கே போராடுகிருள். தன்னை ப்பார்வது ப்ராமரிப்பீர்களா? என அவலக் குரல் எழுப்புகிருள்.

ஈழத்திலிருந்து நாடுகடத்தப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு இதுபோன்ற பலஇன்னல்கள் உருவாக்கப்படுகின்றன. தமது சொந்தச் சகோதரர்களை மானபங்கப் படுத்தியதை தட்டிக்கேட்ட இளைஞர்களின் கை, கால்கள் வெட்டப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளது.

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்குமுன் காட்டை வெட்டி தோட்டம் உருவாக்க ஆசை வார்த்தை காட்டி ஆங்கிலேயரால் இங்கு கொண்டுவரப்பட்டோர் எமது முன்னேர். அவர்கள் தன்னை மறந்து தமது சமூகத்தை மறந்து, இந்நாட்டுக்காகவே தம்மை அர்பணித்துக் கொண்டார்கள். ஆனுல் இந்நாட்டு சிங்கள சோவனி அரசாங்கங்கள் அவர்களை அடக்கி ஒடுக்கி, அடிப்படை உரிமைகளான வாக்குரிமை, குடியுரிமை, மொழியுரிமை அனைத்தும் பறிக்கப்பட்டு அனுதைகளாக்கி இன்று ஏதிலிகளாக (எதுவுமற்றவர்களாக) ஆடு, மாடுகளைப் போல் கப்பலில் ஏற்றுகிருர்கள். அங்கும் எம்மவர்கள் இன்னேரன்ன இன்னல்களுக்கு உள்ளாகி உயிரையும்பறிகொடுக்க வேண்டியுள்ளது.

இந்நாட்டிற்காகவே உழைத்து உருக்குலைந்துபோன மக்களின் பிள்ளைகளுக்கும் ஏன் இந்த அவலநிலை? இவற்றிற்கெல்லாம் ஓர்தீர்வு காணப்படவேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

## தீர்வென்ன?

நாம் தமிழ் பேசும் மக்கள் என்பதனுலேயே எமது வாக்குரிமை, குடியுரிமை, மொழியுரிமை என்பவற்றை பறித்தது சிங்கள அரசாங்கம். நாம் எங்கு வாழ்ந்தாலும், தமிழ் பேசும் ஓர் இனம் என்பதை உணர்ந்து சிங்கள சோவனிச ஸ்ரீலங்காவை எதிர்த்துப் போராட வேண்டும், அப்போராட்டம் வெறும் உரிமைப் போராட்டமாக இல்லாமல் உடமைப் போராட்டமாக மாற வேண்டும். இவ்வுடமைப் போராட்டம் வடக்கு கிழக்கு மலையகத்தையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒருசமத்துவ சமதர்ம சமுதாய ஆட்சியை நிலைநிறுத்துவதாக அமைய வேண்டும்.

# வாசகர்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையின் தார்ப்பரியத்தை புரிந்து கொள்ளாமலோ அல்லது புரிந்தும் புரியாதவர்கள் போல் நடிப்பதன் மூலம் தமது வர்க்க நலனை காக்க முயலுகின்ருர்கள், தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையோரின் பிரச்சனைகளை தர்க்கீகம் முன்வைத்து, தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்தமான பிரச்சனைகளுக்கான தீர்வாக சமத்துவ சமதர்ம ஈழத்தை உருவாக்கத் தன் பணியைத் தொடர்ந்தும் செய்ய எனது பங்களிப்பு என்றும் உண்டு.

தர்க்கீகம் ஒவ்வொரு மாதமும் தவருமல்கிடைக்க ஆவன செய்யும்படியும் கட்டுரைகளைச் சிறியதாக்கி, அதிக கட்டுரைகளைப் பிரசுரிக்கும் படியும், கேட்டுக் கொள்கிறேன்.

தி. பாலமுருகன்
சித்தாண்டி.

www.tamilarangam.net

# உலகச் செய்திகள்

## பிரிட்டனில் வேலே நிறுத்தம்

பிரிட்டனில் புகையிரத சாரதிகள் 25,000 பேர் வேலே நிறுத்தம் செய்தனர். இதனுல் அந்நாட்டின் சகல புகையிரத சேவைகள் அனேத்தும் முற்ருக ஸ்தம்பிதம்அடைந்தது. மூன்று சதவீத சம்பள உயர்வு கோரி சாரதிகள் வேலே நிறுத்தம் மேற் கொண்டனர். இந்த வேலே நிறுத்தத்தின் பயனுக பிரிட்டிஷ் புகையிரதப் பகுதிக்கு 4 கோடி ஸ்ரேலிங்பவுண் இழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட தொழிற் சங்கம் ஏற்கத்தக்க வேலே நேரத்திட்டத்திற்குஇணங்காத வரை சாரதிகளுக்கு சம்பள உயர்வுவழங்கப்பட மாட்டாது என புகையிரதப் பகுதி திட்டவட்டமாக அறிவித்துள்ளது. புகையிரத சாரதிகளின் வேலே நிறுத்தத்துடன் பஸ் தொழிலாளர்களும் இணேந்து வேலே நிறுத்தத்தை மேற் கொண்டனர். இதனுல் பெருந்தொகை யாஞேர் தமது வேலேத்தளங்களுக்கு கால் நடையாகவே சென்றனர். 1926ம் ஆண்டில் நடைபெற்ற பொது வேலே நிறுத்தத்திற்குப் பின்னர்இடம் பெற்ற பெரிய போக்குவரத்து வேலே நிறுத்தம் இதுவாகும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## இஸ்ரேலுக்கு நச்சு வாயுக்கள்

நச்சு வாயுக்களே உற்பத்தி செய்யும் மூலப் பொருள் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டுவந்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மூலப்பொருட்களே சட்டவிரோதமாக உற்பத்தி செய்து அனுப்பப் பட்டு வந்தமைக்கு எதிராக மேற்கு பெர்லின் நகர வழக்கு தொடுநர் குற்றம் சுமத்தியுள்ளார். இத்தகைய செயலே செய்த ''வீராக் கெமிக்கல் கம்பனி'' என்ற மேற்கு பெர்லின் நிறுவனத்திற்கு எதிராகவே குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது உலகப்போரின் போது பாதிக்கப் பட்டது போன்ற நச்சு வாயுக்களே தயாரிப்பதற்கு தேவைப்படும் தியோ போஸிஜின் என்ற மூலப் பொருளே உற்பத்தி செய்ததாகவே இந்த நிறுவனத்திற்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 1979ம் ஆண்டு வரை மேற்படி தியோ போஸிஜின் மூலப் பொருளே சட்டவிரோதமாக தயாரித்து வந்தது என்றும் 1977 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 1.7 தொன் மூலப் பொருள் ஏற்றுமதி செய்யப் புட்டுள்ள தென்றும் இதில் பெரும் பகுதி இஸ்ரேலுக்கே ஏற்றுமதி செய்யப்பட்ளது என்றும் வழக்குத் தொடுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## பிரான்சில் குண்டு வெடிப்பு

பிரான்சின் தலேநகரான பாரிசில் வங்கிக் கட்டடங்கள், வர்த்தக கூடங்கள் பல குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு கோர்ஸிகன் தேசிய விடுதலே முன்னணி என்ற இயக்கம் உரிமை கோரியுள்ளது,

பிரான்சின் ஒரு பகுதியாக இருந்து வரும் கோர்ஸிகன் தீவு மக்கள் சுதந்திரம் கோரி போராட்டம் நடாத்தி வருகின்ருர்கள், பிரான்சில் சோஷலிச அரசு பதவிக்கு வந்த போது கெரில்லாக்கள் தமது நடவடிக்கைகளே சுமார் எட்டு மாத காலம் நிறுத்தி வைத்திருந்தார்கள். கடந்த வாரம் வட கோர்ஸிகன் நகரில் வைத்து பிரான்சின் வெளிநாட்டுப் படைப் பிரிவு வீரர் ஒருவர் கெரில்லாக்களிஞல் சுட்டுக் கொல்லப்பட்டார் இதன் பின் பாரிசின் 17 இடங்களில் அதிர்ச்சி தரக் கூடியஇந்த குண்டு வெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

பிரான்ஸ் 1768ம் ஆண்டில் இத்தாலிய மாநிலத் தலேநகர் ஜெஞேவாவில் இருந்து கோர்சிகா தீவைக் கொள்வனவு செய்தது.

## கம்பாலாவில் தாக்குதல்

உகண்டா ஜனுதிபதி மில்டன் ஒபடேயை பதவி கவிழ்க்கும் முயற்சியாக கம்பாலாவில் கெரில்லாத் தாக்குதல் ஒன்று நடைபெற்றுள்ளது. இராணுவத்தினருக்கும் கெரில்லாக்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 67 கெரில்லாக்களும் இரண்டு இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். ஆயுத பாணிகளான 300 கெரில்லாக்கள் தலேநகரான கம்பாலாவுக்குள் பிரவேசித்து இராணுவ முகாம்கள் மீதே தாக்குதல் நடாத்தப்பட்டது. இராணுவ முகாம்களே கைப்பற்றி அரசை பதவி கவிழ்ப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சியே இத்தாக்குதல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 1979ம் ஆண்டு உகண்டா ஜனுதிபதி இடி அமின் பதவி கவிழ்க்கப்பட்டு நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற உக்கிரமான தாக்குதல் இதுவென கூறப்படுகின்றது.

## குவத்தமாலவில் இராணுவப் புரட்சி

குவத்தமாலாவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி ஜனுதிபதி லூகஸ் கார்சிகா பதவி கவிழ்க்கப்பட்டார். கடந்த 7ம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று யூலே மாதம் ஜனுதிபதியாக பதவி ஏற்க இருந்த ஜெனரல் குவாராவுக்கும் என்ன நடந்தது என்பது இன்னமும் அறிவிக்கப் படவில்லே. மத்திய அமெரிக்காவில் சனத்தொகையில் பெரிய நாடான இந் நாட்டில் நீண்ட காலமாக இடதுசாரி, வலதுசாரிமோதல் இடம் பெற்று வந்தது.

இராணுவத்தினர் தேசிய வாஞெலி நிலேயத்தையும் முக்கிய அரசாங்க அலுவலகங்களேயும் கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்தும் பல இடங்களில் சண்டை நடப்பதாக அறிவிக்கப்படுகின்றது. ஊழல், மோசடிகளிலிருந்து மக்களேக் காப்பாற்றவே தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாக இராணுவத்தினர் வாஞெலியில் அறிவித்துள்ளனர்.

## பங்காள தேஷில் இராணுவப் புரட்சி

பங்காளதேஷின் ஜனுதிபதி அப்துஸ் சத்தார் பதவி கவிழ்க்கப்பட்டு இராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. இராணுவத் தளபதி முகம்மது எர்ஷுபுத் ஆட்சிப் பெறுப்பைக் கையேற்றுள்ளார்.

முன்ஞள் ஜனுதிபதி ஷியா உர்ரகுமான் படுகொலேயை அடுத்து கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் சத்தார் வெற்றி பெற்று பதவியேற்ருர். கடந்த ஆறு வருடங்களிலும் பங்காளதேஷில் 18 இராணுவ சதிப் புரட்சிகள் இடம் பெற்றுள்ளன. சதிகளும் படுகொலேகளும் நடைபெற்ற பின்னர் பதவிக்கு வந்தவர்களில் பதவி கவிழ்க்கப்பட்ட சத்தார் நான்காவது ஜனுதிபதியாவார். பங்களாதேஷ் தனிநாடாக உருவாகிய 10 வருட காலத்திற்குள் பதவிக்கு வந்த ஜனுதிபதிகளின் வரிசையில் இவர் ஏழாவது இடத்தைப் பெறுகின்ருர்.

தற்போது அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் இராணுவ தலேவர் எர்ஷாத் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளே தணிப்பதற்காகவே தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாக அறிவித்துள்ளார்.

---

உங்கள் ஆக்கங்களே 'தர்க்கீகம்' வரவேற்கின்ற, அதேவேளேயில் தர்க்கீகத்தை நீங்கள் திறனுய்வு செய்யலாம். அதன் மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னே செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலேயை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தைக் கோருப்வையாகவும் அமையட்டும்.

'தர்க்கீகம்''

த. பெ. எண். 103,
யாழ்ப்பாணம்




இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சமூக அரசியற் பொருளாதார மாற்றம் வேண்டி நிற்கும் இன்றைய கட்டத்தில், இவற்றின் தார்ப்பரிய உண்மைகளே ஆழமாக நோக்காமல் மேலெழுந்த வாரியாக பிரச்சனேகளே அணுக முற்படுவதில் சிலர் முனேவதைக் காண்கின்ருேம். இத்தகைய முயற்சி தமிழ்ப் பேசும் மக்களின் பூரணத்துவ விடுதலேக்கு எந்த வகையிலும் உதவாது என்பது இயங்கியல் நியதி.

ஒரு சமுதாயத்தின் விமோசனம் அதன் சமூக அரசியல் பொருளாதார மாற்றத்திலேயே தங்கியுள்ளது. இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று பிணேந்தவையாக அடிப்படை மாற்றத்தின் மூலாதாரமாக விளங்குகின்ற வேளேயில், ஒன்றுக்கொன்று தொடர்பில்லா வகையிலான நோக்குகளேக் கொண்டு மக்களின் விடுதலேக்கான பாதைகளே அரசியற் கட்சிகளும், குழுக்களும் தமது குறிக்கோள்களாக கொண்டு செயற்படுவதும் அதிற் தடங்கற்படுவதும் நிகழ்ந்து வருவதொன்ருகவுள்ளது.

தமிழ்ப் பேசும் மக்கள், இன்றைய சமூக அமைப்பால் சாதி, சமய, பிரதேச ரீதியாக முரண்பட்டுக்கொண்டு வர்க்க ரீதியாக சுரண்டப்படுகின்ற நிலேயிலும், இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலேயிலும் இவற்றையெல்லாம் மக்களின் அடிப்படைப் பிரச்சனேகளாக முன் நிறுத்தாமல் வெறுமனே அரசியல் ரீதியாக விடுதலேகாண முற்படுவது தமிழ்ப் பேசும் மக்களுக்கு எந்த வகையிலும் முழுமையான விமோசனம் அளிக்காது. அரசியல் விடுதலேயை முதலில் நாடுவோம். இது கிடைத்ததும் சமூக, பொருளாதார நிலமைகளே பின் கவனிப்போம் என்பது வெறும் வெற்று வேட்டு. அரசியல் விடுதலேயை நாடுவது எதற்காக என்பது அர்த்தமில்லாமல் போய் விடுகின்றது. அரசியல் விடுதலேயை நாடுவதற்கு மக்களின் முழுமையானதும், ஸ்திரமானதுமான எழுச்சி அவசியம். அத்தகைய எழுச்சியை ஏற்படுத்துவதற்கு அம்மக்களின் அடிப்படையிலான அன்ருடப் பிரச்சனேகளே வெளிக் கொண்டு வர வேண்டும்.

சிங்கள சோவனிச அரசின் இனப்பாகுபாட்டால் அரசியல் உரிமைகளேயும் இழந்து நிற்கின்ருேம் என்பது உண்மை. ஆனுல் இந்த அரசியல் உரிமைகளிலும் பார்க்க தமிழ்ப் பேசும் மக்களின் பெருந்தொகையினரான சாதாரண பாமர தொழிலாள மக்கள் சமூக அமைப்பு ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் சொல்லவொண்ணுத் துன்பங்கள் பல அனுபவித்து வருகின்றனர். இதனுல் தான் அரசியல் ரீதியாக நேரடியான இன்னல்கள் இருக்கின்ற போதிலும் பொருளியல் ரீதியான பிரச்சனே பல இளேஞர்களே மட்டுமல்ல, தொழில் வாய்ப்பு பெற்றிருந்தோரைக் கூட வெளிநாடுகளுக்குத் துரத்துகின்றன. ஆனுல் இப்படி வெளிநாடுகலுக்குச் சென்று குறிப்பிட்ட காலத்துக்குள் உழைத்து சேமிப்பதன் மூலம் பொருளர்தர்ர பிரச்சனேகளுக்கு தீர்வு கண்டுவிட முடியுமா ? என்பதும் கேட்க வேண்டிய தொன்று.

இப்படியான சூழ்நிலே எழுவதற்கும், மக்களின் சிந்தனேப் பாட்டிற்கும் காரணம், மக்களிடத்தில் பிரச்சனேகளுக்கான தெளிவான கருத்து முன்வைக்கப்படவில்லே என்பதை அரசியல் விற்பனர்கள் உணர்வார்களா? இதை உணரும் பட்சத்திலேயே தமிழ்ப் பேசும் சமுதாயத்தின் விமோசனத்திற்கு பங்களித்தவராவர். என்பதே தர்க்கீக கருத்து. இதனுல் தான் கருத்து மக்களேப் பற்றிக்கொள்ளும் போது அது சக்தியாய் உருவெடுத்து தமிழ்ப் பேசும் மக்களின் விமோசனத்திற்கு வழிவகுக்கும் என்பதையே தர்க்கீகம் தன் தலேயாய பணியாகக் கொண்டுள்ளது.

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ். விக்னேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாண ; பிரதானவீதி 360- இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்